உ

திருச்சிற்றம்பலம்

# தென்காசி

# ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி கோயில்

# வரலாறு.



திருக்கோயில்

கோயில் வெளியீடு

நான்காம் பதிப்பு

1961.

1
Total pages = 69
ACCESS No. 112790
Q23:38.2119
N61
112790

உ

திருச்சிற்றம்பலம்



# தென்காசி

# ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி கோயில்

# வரலாறு.


ஆசிரியர்,

திருவாளர்: இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்



கோயில் வெளியீடு

நான்காம் பதிப்பு

1961.

விலை. நயேபைஸே ஐம்பது

3

உ
சிவமயம்

# முன்னுரை.

இப்புத்தகம் தென்காசி, ஸ்ரீ காசிவிசுவநாத சுவாமி கோயில் வரலாற்றின் நான்காவது பதிப்பு. இப்பதிப்பு வெளிவரும் வரையுள்ள இக்கோயிலின் முக்கிய நிகழ்ச்சிகளெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன. சிற்பங்களின் படங்களும் சில கல்வெட்டுகளின் நகல்களும் காணப்படும். இறை வழிபாடு செய்கிறவர்கள் அனைவரும் கோயில்கள் வரலாறுகளைத் தெரிந்துகொள்ளுதல் நலம். வழிபாட்டு முறைக்கு மிகவும் பயன்படும். கடவுள் தத்துவம் எங்கும் அருவமாய் வியாபித்துப் பரந்து விரிந்து ஆழ்ந்து சூக்குமமாய் நிற்கும் ஓர் நுண்ணிய பொருளாகலான், அதை மனதில் அமைத்து வழிபாடு செய்தல் எளிதல்ல. ஆனதால் கடவுள் எந்த தலத்தில் என்ன உருவங்கொண்டு என்ன திருவிளையாடல்கள் புரிந்து மக்களுக்கு எவ்வாறு கருணை புரிந்தாரென்பதையறிந்துகொண்டால் இறை வழிபாட்டில் ஓர் பற்றுதல் ஏற்பட்டு இறைவனைத் தான் விரும்பும் உருவத்தில் மனதிலமைக்க இடந்தரும். இப்பற்றுதலை மக்களிடம் பெருக்கவே இதுபோன்ற வரலாற்றுப் புத்தகங்கள் ஹிந்து அறநிலையக் கழகத்தின் ஆணைதாங்கி அச்சிடப்பெறுகின்றன.

அன்பர்கள் இச்சிறிய புத்தகத்தை வாங்கிப் படித்து இறைபணியும் வழிபாடுஞ்செய்து எல்லா நலன்களும் பெருவார்களாக.

S. கணபதியா பிள்ளை,
நிர்வாக அதிகாரி.

P. S. பிச்சாண்டி செட்டியார்,
ஆட்சித் தர்மகர்த்தர்.

தென்காசி,
20—9—'61

M. சிவகுருநாத பிள்ளை B. A. B. L.,
S. ஆறுமுக முதலியார்,
தர்மகர்த்தர்கள்.

5



நடராஜ மூர்த்தியின் ஊர்த்வ தாண்டவம்

உ
திருச்சிற்றம்பலம்.
மெய்கண்ட தேவன் மெல்லடி வாழ்க!

# தென்காசி
# ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி கோயில்
## வரலாறு.

செண்பகக்காத் தென்காசிச் சீர்பெருகும் பெம்மானின்
நண்பகத்தே கொண்டினிதா நான்புகல்வேன் - விண்பரவும்
ஊரின் வரலாறும் உற்றருள் உலகையன்
பேரும் புகழும் பெரிது.

## இட அமைப்பு.

இந்தியாவின் தெற்குக்கோடியிலுள்ள செந்தமிழ் வழங்கும் **திருநெல்வேலி மாவட்டத்** தென்மேற்குப் பகுதியிலுள்ளது **தென்காசி வட்டாரம்.** இவ்வட்டாரத்தின் தலைநகரே **தென்காசி.** இவ்வூரிலிருந்து தென்மேற்கே மலையடிவாரத்தில் உள்ளது குற்றாலம்; இங்கேதான் சித்திராநதி அதாவது சிற்றாறு மலையிலிருந்து வட அருவியாகத் தரையிலே வந்து சேருகிறது. இவ்வாறு இலஞ்சிக் குமரர் கோவில் வழியாகத் தென்காசிக்கு வருகிறது. இவ்வாற்றின் இடது கரையில்தான் தென்காசி ஊரும், கோவிலும் இருக்கின்றன. இவ்வூர் பெரிய இரயிலடிச் சந்திப்பு. இங்கே தான் தென்காசியிலிருந்து வடகிழக்கே விருதுநகருக்குப் போகும் பாதையும், கிழக்கே திருநெல்வேலிக்குப் போகும் பாதையும் பிரிகின்றன. இரயிலடியிலிருந்து கோவில், ஆறு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது.

மேற்கே செங்கோட்டை, கொல்லம், திருவனந்தபுரம். தெற்கே கடையம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, பாவூர், திருநெல்வேலி. வடக்கே கடையநல்லூர், சங்கரன்கோவில், கரிவலம்வந்தநல்லூர், இராசபாளையம்,

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களுக்கெல்லாம் இரயிலில் போவதற்கு வசதி யிருப்பது போலவே, அடிக்கடி போகும் வாடகை மோட்டாரிலும் போவதற்கு வசதி யிருக்கிறது. இவ்வூரிலிருந்து நல்ல சாலைகள் நாலா பக்கங்களிலும் போகின்றன. இதன் சுற்றுப்பக்கங்களிலுள்ள ஊர் எதுவும் இதனோடு நல்ல சாலையினால் தொடுக்கப் பெறாமல் இல்லை.

## மலைகள், குன்றுகள், ஆறுகள், ஏரிகள்.

இவ்வூர் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மிகவும் அருகில் இருக்கின்றது. அதனால் இதனைச்சூழப் பட்சிப்பொற்றை (பட்சிநாயக்கன் பொற்றை,) வாலியம் பொற்றை, திருமலை முதலிய பல குன்றுகள் இருக்கின்றன. பெரிய மலையின் இப்பகுதி திரிகூடமலை என்று பெயர் பெறும். திரி – மூன்று கூடம் – சிகரம். மூன்று சிகரங்களை உடைமையினாலே திரிகூடம் என்று பெயர் ஆயிற்று. திரிகூடமலைமேலிருந்து தொடங்கி, தேனருவி, செண்பகாதேவி அருவி, பொங்குமா கடலருவி, வட அருவியாக வழிந்து திருக்குற்றாலநாதருடைய திருக்கோவில் வழியாக வருவதே **சிற்றாறு**. உள்ளத்தை மகிழச் செய்கின்ற பழைய குற்றாலம் என்ற இடமும், ஐந்துதலை யருவியும் கண்டு நீராடி இன்புறத்தக்கன. பழைய குற்றாலத்தில் வரும் கானாறு **அழகனாறு** என்ற பெயருடன் பல குளங்களிற் பாய்ந்து நிரப்பி மணிகருணிகை தீர்த்தத்திற்குக் கிழக்கே சிற்றாற்றிற் சேர்கின்றது. **ஐந்துதலையருவி** நீர் சிறு ஆறாக ஓடிவந்து திருவிலஞ்சிக் குமரர் கோவில் அருகே சிற்றாற்றிற் கலக்கின்றது. **தலைமலை ஐயனாறு** செங்கோட்டையாற்றின் ஒரு பகுதியிற் கூடுகின்றது. **சதாசிவநதி** என்பது புளியரை வழியாக வரும் செங்கோட்டையாறு; இது சிவமதுகங்கை என்னப்பெறும் சிற்றாற்றில் தென்காசியிலுள்ள **முக்கூடலில்** சேருகின்றது. முக்கூடலில் தேனாறாகிய செங்கோட்டை ஆறும், பாலாறாகிய குற்றால ஆறும், ஊற்றாறு ஆகிய பாதல நதியும் ஆகிய மூன்றும் கூடுகின்றன. இது மிகச் சிறந்த தீர்த்தம்; வடகரையாறு **நெல்லீச்சுர நதி** எனப்படும். நெல்லிமலை

ஊற்று வந்து கூடுதலால் இது இப்பெயர் பெற்றது; இது வீரகேரளன்புதூர்ப் பக்கத்தில் சிற்ருற்றை அடைகின்றது.

சிற்ருறு முக்கூடலிலிருந்து நேரே கிழக்காகச் சிறிது தூரம் ஓடிவந்து ஊரையடைந்தவுடன் நேர் தெற்கே திரும்பி வளைந்து மறுபடி கிழக்காக ஓடுகிறது. முன் காலத்தில் இவ்வாறு இப்படித் திரும்பாமல் நேர் கிழக்காகவே ஓடி ஊரின் கிழக் கோடியிலுள்ள பொன்னிப்பாறையின் கிட்டத் தெற்கே வளைந்து சென்றது என்று அறிஞர் பலர் கூறுகின்ருர்கள். இதற்கு ஆதாரமாக அவர்கள், புலியூர் அணை ஒப்பணைப்பிள்ளையார் கோவிலின் கிட்ட இருந்ததாகவும், அக்காலின் பத்துத்தான் சம்பாப்பத்து என்பதாகவும், சம்பாப்பத்து இருந்த இடம் தான் சம்பாத்தெரு என்னப் படுகிறதாகவும், இப்போது ஊரின் அப்பகுதியில் கீழே தோண்டும்போது பல சிறுசிறு கால்வாய்கள் காணப்படுகின்றதாகவும், புலியூர் அணையென்னும் இப்போதுள்ள புது அணை உண்டானபோதுதான் அணைக்கரைப் பிள்ளையார் கோவில் தோன்றியதாகவும் கூறுகின்ருர்கள். கோவிலின் வடக்குத் தேர்த் தெருவுக்கு அடுத்தாற்போலுள்ள சிறு தெருவில் வடமுகமாகச் சித்தார்த்தியம்மன் கோவில் இருக்கிறது; அதன் முன் உள்ள கிணற்றுக்குள் ஒரு மண்டபம் கிழக்கே பார்க்க இருக்கிறது; இம்மண்டபம் மிகப் பழமையான மண்டபம்; இது, முன் ஆறு அவ்வழியாக ஓடியபோது அதன் கரையில் இருந்ததாகக் கூறப்பெறுகிறது. ஒப்பணைப் பிள்ளையார், தலபுராணத்தில், ஒப்பனைப்பிள்ளையார் என்று கூறப்பெறுகிருர்.

தென்காசியைச் சூழப் பல சிறு சிறு குளங்கள் காணப்படுகின்றன, அவைகளில் முதன்மையானவை சிவலப்பேரி, சாலாப்பேரி, இடைமலைக்குளம் என்பன. மேலகரக் காலும், புலியூர்க் காலும் சிற்ருற்றிலிருந்து பிரிந்து தென்காசி ஊரைச் சேர்ந்த அளவிலா நஞ்சை நிலங்களை வளனுறுத்துகின்றன.

தென்காசியை விட்டுக் குற்ருலத்துக்குப் போகவேண்டுமானுலும், திருநெல்வேலிக்குப் போகவேண்டுமானுலும் சிற்ருற்றைத் தாண்டித்தான் போகவேண்டும். குற்ருலச் சாலையில் ஆற்றின்மேல் இருப்பது யானைப்பாலம்; திருநெல்வேலிச்சாலையிலிருப்பது " ஆஜாத் " பாலம்.

## ஊரின் வெப்பதட்ப நிலை, மக்கள் தொகை.

மக்கள் தொகை ஏறத்தாழ 30,000. இதில் மூன்றில் ஒரு பங்கு மகமதியர். இவர்களுக்கும், இவ்வூரிலுள்ள செங்குந்த வகுப்பினருக்கும் பிழைப்புத் தொழில் நெசவு.

சித்திரை மாதக் கடைசி முதலாக ஆரியங்காவுத் தொண்டின் வழியே தென்மேற்குக் காற்று வீசுகின்றது. வைகாசி கடைசியில் சாரல் மழை தொடங்கி ஆனி, ஆடி, ஆவணி முற்பகுதிவரை உடலுக்கு மிக்க இனிமையைத் தருகின்றது. எப்போது பார்த்தாலும் சிறுமழையும், அதன் பயனுகத் திருக்குற்ருல அருவியாட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திறங்கிச் செல்லும் மக்கள் கூட்டமும், ஓயாமல் வண்டிகள் ஓட்டமும் நாம் கண்டு மகிழலாம். இவ்வூர் மக்கள் நித்தமும் " கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்ருலக் " காட்சியைக் கண்டு சென்று நுகரும் வசதி மிக உடையவர்கள்.

## சத்திரங்கள், சாவடிகள், தங்கும் இடவசதிகள் முதலியன.

பொருந்தி நின்ற பெருமாள் தெருவில் கிராம முனிசிபு சத்திரம், சொக்கலிங்கம் பிள்ளை சத்திரம் என இரண்டும், ஒற்றைத் தெருவில் செட்டி சத்திரம் என்பதும், ஆக மூன்று சத்திரங்கள் இருக்கின்றன. வழிப்போக்கர் விடுதி (Travellers' Bungalow ) ஒன்று இரயிலடிக்கிட்ட இருக்கிறது. இங்கே சில்லா போர்டாருடைய உயர்நிலைப் பள்ளிக்கூடமொன்றும் ( High School ) மருந்துச் சாலையும் ( Hospital ) இரண்டு பத்திரப் பதிவு நிலையங்களும் இருக்கின்றன; வட்டார



தெப்ப உற்சவம்

13

அலுவலகமும், மேசிஃச்திரேட்டுக் கச்சேரியும் சில்லா முனிசீபுக் கோர்ட்டும், ஊராட்சிக் குழுவும் (பஞ்சாயத்து) உண்டு.

# கோயில்.

## கோவிலின் தோற்றம், அகல நீளம்.

கோவில் மிகப் பெரியதாக ஊரின் நடுநாயகமாக விளங்குகின்றது. கோவிலைச் சுற்றி மாட வீதிகளும், தேர் வீதிகளும் இருக்கின்றன. இங்கே தேர் வீதிகள் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு மாசி வீதிகள் எனப் பெயர் பெறுகின்றன. காரணம் இவ்வூரின் பெரிய தேர்த் திருவிழா மாசி மாதத்தில் நடைபெறுவதுதான். கோவிலின் அகல நீளம் பின்வருமாறு: தென்வடல் அகலம் 318 அடி, கிழமேல் நீளம் 554 அடி.

## கோவிலின் பல பகுதிகள், சுற்றுக்கள், மண்டபங்கள், அவற்றின் பெயர்.

கோவிலின் முன்னால் ஒரு பெரிய மண்டபம் இருக்கிறது. இதுவே புகழ்பெற்ற அனுப்பு மண்டபம். இதற்கு நேர் மேற்கே கிழ மாசி வீதியின் மேல்பால் காசிவிசுவநாதப் பெருமான் திருக்கோவில் இருக்கிறது. அதன் முன்னால் கோவிலின் தெற்கே இருப்பதுபோல ஆறடி உயரமுள்ள நான்கு பக்கமும் எழுத்துக்கள் நிரம்பிய பெரிய கற்றூண் நிற்கிறது.

கோவிலின் தலைப்பில் மொட்டைக்கோபுரம் இருக்கிறது. இது ஒன்பது தட்டுக்களுடன் கி. பி. 1456-ல் பராக்கிரம பாண்டியரால் தொடங்கப் பெற்று, ஆறுண்டுகளில் அறை குறையாக முடிவு பெற்றது. அவர் தம்பி குலசேகர தேவர் கோபுரத்தை முற்றுவித்தார். இச் செய்திகள் இக்கோபுரத்தி லுள்ள கல்வெட்டுகளினால் தெளிவாக விளக்கப்படுகின்றன. "நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் இக் கோபுரத்தில்,

நவாபு பத்திரங்களையெல்லாம் வைத்திருந்தார்; அந்த அறையிலேயே முதலில் தீப்பிடிக்கத் தொடங்கிக் கோபுரத்தின் மேல் தட்டுகளிலெல்லாம் பரவி அழித்துவிட்டது; அது முதல் இது பழுதடைந்த நிலைமையிலிருக்கிறது" என்று பலர் கூறுகின்றனர். **செனக்கீ** என்ற பாதிரியார் எழுதி வைத்திருக்கும் நாட்குறிப்பின்படி 1792-ம் ஆண்டு பிப்ரவரிமீ 12உயில் இந்தக் கோபுரமும், கடிகாரமும் சரியான நிலைமையிலிருந்தன என்பது தெரியவருகிறது. கி. பி. 1824 – 25-ல் பழைய நிலம் அளப்பார் குறிப்பில் இந்தக் கோபுரம் ஒழுங்கற்று மோசமான நிலைமையை அடைந்து விட்டதென்பது விளங்குகிறது. கோவிலின் ஒரு பகுதியிலே தான் தாலூகாக் கச்சேரி இருந்துவந்திருக்கிறது, இவைகளை ஆராயுமிடத்து கோபுரத்தில் தீப்பற்றியது, பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் என்று தெரிகிறது. சங்கரன் கோவில் கோபுரத்தில் இருப்பது போலவே ( இதுவும் இப்போது ஓடவில்லை ) இக் கோபுரத்தின் மேலும் ஒரு நாழிகைக் கடிகாரம் இருந்திருக்கிறது; அது கோபுரத்தோடு தீயில் அழிந்துவிட்டது.

காசிவிசுவநாதர் கோவில் கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மணிமண்டபம், பலிமண்டபம், மாமண்டபம், பிரகாரமண்டபம் என்ற பகுதிகளை உடையது. இதன் தென் பக்கத்தே உலகம்மை கோவில் உள்ளது. இது கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மணிமண்டபம், மாமண்டபம், பிரகார மண்டபங்களோடு திரு முன்பு பக்கப்பத்தி மண்டபங்களுடன் கூடிய திருமண மண்டபத்தையும் உடையது. திருமண மண்டபம் கி. பி. 1572-ல் கட்டப்பட்டது.

இரண்டு கோவில்களையும் சேர்த்துச் சுற்றும், வெளிச் சுற்றும் திருமதிலும், மாடவீதிகளும், தேர்வீதிகளும் சுற்றுக் களாக உள. இரண்டு கோவில்களுக்கும் நடுவில் பஞ்சமூர்த்திகள் கோவில் இருக்கிறது. இது பழைய காலத்தில் பெருமாள் கோவிலாக இருந்ததென்றும் இதிலிருந்த பெருமாள்

திருவுரு ஆற்றங் கரையிலுள்ள பெருமாள் கோவிலுக்கு மாற்றப்பட்டுவிட்டது என்று மக்கள் சொல்கின்றனர். இக்கோவில் அழகன் பெருமாள் குலசேகர தேவர் காலத்தில் கட்டப்பட்டதென்று கல்வெட்டிலிருந்து வெளியாகிறது. தலபுராணத்தில் பெருமாளைப்பற்றி யாதொரு குறிப்பும் காணப்படவில்லை.

### மூர்த்திகளின் பெயர்கள்.

அப்பனின் பெயர்களும். அம்மையின் பெயர்களும் தல புராணம் குழல்வாய்மொழியம்மை திருமணப்படலம் **186, 187**-ம் பாடல்களில் கூறப்பெற்றுள்ளன. அவை வருமாறு;

### காசிவிசுவநாதன் பெயர்கள்.

விசுவனே, விசுவநாதன், விசுவேசன், உலக நாதன்,
பசுபதி, சிவன், மயேசன், பராபரன், முக்கட் பெம்மான்,
சிசுவரம் தருவோன், நம்பன், சிவை மணவாளன், ஏற்ரேன்,
அசுதையார் நீல கண்டன், அநாதி தென் காசி நாதன்.

### உலகம்மை பெயர்கள்.

விசுவையே, விசுவநாதை. விசுவேசை விசாலாட்சித்தாய்,
பசுபதி துணை. மயேசை, பராபரி, உமை, முக்கண்ணி,
சிசுவரன் பனி, லோகாம்பை, சிவை, குழல்வாய்மொழித்தாய்,
அசுதைதீர் வசந்தவல்லி, அநாதை தென்காசித் தாயே.

### தலமரம், தீர்த்தங்கள், பிற சிறப்புக்கள்.

" செண்பக மலர்க்கீழ்மேவும் சிவக்குறி " எனவும், அம்மைக்கு " நீழல் நல்கும் பவள மல்லிகை " எனவும், வருவன கொண்டு தலமரம் (தலவிருட்சம்) செண்பகம் என்பதும் அம்மை பவளமல்லிகைக்கீழ் இருந்தனள் என்பதும் விளங்கும். இவ்வூரில் பலாமரமும் தலமரமாகக் கொள்ளப்பெறுகிறது. இக்கோவிலிலுள்ள பலா மரம் சி வ லி ங் க உருவாக்க்

காய்க்கின்றது. "பலாலிங்கம் காய்க்கும் ஊர்" என்று தலபுராணமுங் கூறுகின்றது. வடகாசியில் இறப்பவருக்கு முத்தி, தென்காசியிலோ "இறப்பார், பிறப்பார், இருப்பார், காண்பார் எவர்க்குமே முத்தி."

இவ்வூரில் எட்டு பிள்ளையார் கோவில்கள் செண்பக பாண்டியரால் அமைக்கப் பெற்றன. 1. கன்னிசுதன், (கன்னி திசையிலிருக்கும் பிள்ளையார்) 2. சுந்தர விநாயகர் (மேல் திசையிலிருப்பவர்) 3. செண்பக விநாயகர் (வடமேற்கு திசை) 4. வெயிலுகந்த விநாயகர் (வடக்கு, கன்னிமார் தெரு விநாயகர்) 5. பொன்னம்பலப் பிள்ளையார் (வடகிழக்கு, கன்னிமார் தெரு) 6. ஒப்பனைப் பிள்ளையார் (கிழக்கு) 7. அபிஷேக விநாயகர் (தென் கிழக்கு) 8. மெய்கண்ட பிள்ளையார் (தெற்கு, சம்பாத் தெரு ஆற்றுத் துறை). எட்டுத் திருமடங்களும் அமைக்கப்பெற்றன. அவை 1. அரசருக்கு முடி சூட்டும் சன்னதி மடம், சிவந்தபாத ஊருடையார் ஆதீனம் (கீழ்த் திசையில், சிவாகமங்கள் ஓதி உணர்தலுக்கு), 2. சிவதீக்கை பெற்றுக்கொள்ள, தென் கிழக்கில் சாமிதேவநயினுர் அகோரதேவராதீனம், 3. கல்வி கற்றுக்கொள்ளத் தெற்கே துருவாசராதீனம் என்னும் வேம்பத்தூர் மடம், 4. சிவ புராணங்கள் கேட்டுணர்தலுக்கு, தென்மேற்கே பௌராணிக ஆனந்தக்கூத்தர் ஆதீனம், 5. தத்துவ விசாரணை செய்ய மேற்கே தத்துவப்பிரகாசர் ஆதீனம், 6. சைவசித்தாந்த சாத்திரங்களை ஓதி உணர்ந்து ஞானோபதேசம் பெறுவதற்கு வடமேற்கில் மெய்கண்டார் ஆதீனம், 7. சைவருக்கு உபதேசம் செய்ய வடக்கில் உமையொரு பாகக்குரு ஆதீனம், 8. சிவ யோகிகள் யோகம் பழகுதற்கு வடகீழ்த்திசையில் இடிவலஞ்சூழ் பரஞ்சோதி தேவர் ஆதீனம் என்பன.

இவ்வூரில் எங்குப் பார்த்தாலும் முருகப்பிரான் ஆறுமுகங்களோடுதான் காட்சி தந்தருளுகின்ருர்.



காளிதேவி

தென்காசியின் வேறு பெயர்கள்:- சச்சிதானந்தபுரம், முத்துத்தாண்டவநல்லூர், ஆனந்தக்கூத்தனூர், சைவமூதூர், தென்புலியூர், குயின்குடி, சித்தர்வாசம், செண்பகப்பொழில், சிவமணவூர், சத்தமாதரூர், சித்திரமூலத்தானம், மயிலைக்குடி, பலாலிங்கப்பாடி, வசந்தக்குடி, கோசிகை என்பன.

இக்கோவிலைச் சேர்ந்த தீர்த்தங்கள் முதன்மையானவை ஏழு. அவை தீர்த்தச் சிறப்பு என்ற பகுதியில் தலபுராணத்தில் விவரிக்கப் பெற்றுள்ளன. திருக்கோவில் மகிமை உரைத்த படலம் 12-ம் பாட்டு பின்வருவது:

நன்னக ராம்**தென் காசிஆ லயத்துள்**
**நாற்கிணறு ஆனந்தப் பொய்கை**
அன்ன **ஈசான தீர்த்தம்** நல் **ஆற்றில்**
ஆடினர் பிரமகத் திகள்முன்
பன்னரும் பவம்தீர்ந்து ஓங்குமெய்ஞ் ஞானம்
படைத்தனர் சிவன்உல கடைவார்
மன்னமுப் போதும் தெரிசனை செய்வோர்
வான்கழல் நிழல்வீற் றிருப்பார்.

உலகம்மை முன்பு இருப்பது ஆனந்தத் தீர்த்தம், பின்புறம் இருப்பது சகத்திரேச தீர்த்தம், கோவிலுள்ளே வடக்கே இருப்பது காசித் தீர்த்தம், அதன் கிழக்கே வயிரவ தீர்த்தம் இருப்பது. மடைப்பள்ளியில் இருப்பது அன்னபூரணி தீர்த்தம். இவை ஐந்தும் அகத்தீர்த்தங்கள். கோவிலுக்கு வடகிழக்கில் இருக்கும் பொய்கையே ஈசானத் தீர்த்தம் எனப்பெறும். முக்கூடல் துறை முதலிய பல தீர்த்தத்துறைகள் சித்திரையாற்றில் அமைந்திருக்கின்றன.

# உட்கோவில், சுற்றுக்கோவில்.

## உட்கோவில் மூர்த்திகள்.

பெருமான் கோவிலினுள் கருப்பக் கிரகத்தில் காசிவிசுவலிங்கமும், பிரியாவிடையாளும் **அர்த்த மண்டபத்தில்**

பள்ளியறைச் சொக்கரும், **மாமண்டபத்தில்** அனுக்கைப் பிள்ளையாரும், சாமி, அம்மை, கூத்தர், அதிகார நந்தி, சந்திர சேகரர், பிச்சாடனர், அனந்த தேவர், பலிநாயகர், இவர்களின் திருவிழாத் திருமேனிகளும், **கொடிமர மண்டபத்தில்** செண்பகமரம், பலாமரம், கொடிமரம், நந்தி, அதிகார நந்தி, சூரியனும், **சிவிலி மண்டபத்தில்** சமயாச்சாரியார் நால்வர், அறுபத்துமூவர், சிவலிங்கம், பிள்ளையார், சுரதேவர், தெட்சணு மூர்த்தி, ஏழு கன்னிகைகள், பிள்ளையார், பஞ்சலிங்கம், ஐயனூர், கலைமகள், ஆறுமுகர், கெஜ இலக்குமி, ஆநந்தக் கூத்தர், சிவகாமி, காரைக்காலம்மையார், சண்டேசுரர் திருவுருவங் களும், **மாபலிமண்டபத்தில்** திருவாயிற் காவலரும், மாபலி பீடமும், பெரிய தூண்களில், 1. அகோர வீரபத்திரர், 2. மன்மதன், 3. திருமால், 4. காளி, 5. வீரபத்திரர், சட்டைநாதர், 6. இரதி, 7. மாதாண்டவ மூர்த்தி, (பதஞ்சலி வியாக்கிரபாதருடன்) 8. ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி, (பிரம விஷ்ணுவுடன்) 9-10. இரண்டு தமிழணங்கு களும் இருக்கின்றனர். பக்கத்தில் ஒன்பது கோள்களும் உண்டு. மாமண்டபத்தில் இக்கோயில் கட்டிய பராக்கிரம பாண்டிய மன்னர் செம்பு விக்கிரகமாய்த் திகழ்ந்து நிற்கின்றூர்.

பெருமான் கோவிலுக்கு வடபுறம் வெளிச்சுற்றில் சொக்கர் மீனுட்சி கோவிலும், தரணி பீடமும், சகத்திர லிங்கமும், வயிரவர் கோவிலும் உள.

அம்மை கோவில் **கருப்பக் கிரகத்தில்** உலகம்மையும் **அர்த்த மண்டபத்தில்** பள்ளியறை அம்மையும், **மணி மண்டபத்தில்** நந்தி, பள்ளியறை பிள்ளையாரும்; **மாமண்டபத்தில்** வள்ளியம்மை தெய்வானையுடன் ஆறுமுகரும், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியரும், **சுற்றுப்பிரகாரத்தில்** பிள்ளையாரும், வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகரும், சண்டேசுவரியும், **பலிமண்டபத்தில்** கொடி மரமும், மாபலி பீடமும், விநாயகரும், வள்ளி தெய்வானை யுடன் ஆறுமுகரும், இருக்கின்றனர். பலிமண்டப விநாயகர் பத்து திருக்கரங்களும் இடபாகத்தில் சக்தியும் உடையவர்.

## சார்புக் கோவில்.

1. வரகுணநாதர் கோவில், 2. குலசேகரநாதர் கோவில், 3. சிதம்பரேசர் கோவில், 4. விண்ணவரம் பெருமாள் கோவில், 5. நவநீதகிருட்டினன் கோவில், 6. பொருந்தி நின்ற பெருமாள் கோவில் என்பன. இவைகளில் பொருந்தி நின்ற பெருமாள் கோவிலுக்குத் தனித் தருமகருத்தர் உண்டு. வெயிலுகந்த பிள்ளையார், சன்னதி மடம் உடையார், அரசூர் நங்கை, கீழமாரி நஞ்சை ஐயனர் இவர்களுடைய கோவில்களும் சார்புக் கோவில்களே.

## சிற்பச் சிறப்பு.

தென்காசிக் கோவிலில் உலகத்திலேயே ஒப்புயர்வற்றன என்று சொல்லும்படிக்கான சிற்பச் சிறப்பு காணப்படுகின்றது. காசிவிசுவநாதர் கோவில் திரு ஓலக்க மண்டபத்தில் எட்டுப் பெரிய கற்றூண்கள் நிற்கின்றன. அவைகளில் தெற்கு வரிசையில் மேற்கிலிருந்து கிழக்காகப் பின்வரும் உருவங்களும் 1. அகோர வீரபத்திரர், 2. கரும்பு வில்லும் தாமரை அம்புங் கையிலுள்ள மன்மதன், 3. திருமால், 4. காளியும், வடக்கு வரிசையில் மேற்கிலிருந்து கிழக்காக 1. வீரபத்திரர் சட்டைநாதர், 2. அன்னத்தின் மேல் அழகாய் அமர்ந்திருக்கும் இரதிதேவி. பதஞ்சலி வியாக்கிர பாதருடன் மாதாண்டவ மூர்த்தி, 4. திருமால் நான்முகனுடன் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும் அமைந்திருக்கின்றனர். கோவிலைப் பார்க்க மேற்கு முகமாகத் தெற்கில் ஒன்றும் வடக்கி லொன்றுமாக உள்ள தூண்களில் பேரெழில் வாய்ந்த இரண்டு பெண்களின் உருவங்கள் அமைந்திருக்கின்றன. இவ்விரண்டில் ஒரு பெண் வெண்கலக் கண்ணுடி பார்த்து நெற்றியில் பொட்டு இடுகின்ருள். மற்ருெரு பெண் தன் நாயகனை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்ருள். சிலைகள் ஒவ்வொன்றும் தூணுடன் சேர்த்துத் தனித்தனி ஒரே கல்லில் அமைக்கப்பெற்றுள்ளது. இச் சிலைகள் கல்லில்கனு அல்லது கனியெனத் தோன்றும். அவற்றின் அளவும் வேலை நுணுக்கமும் பொலிவும் பார்ப்பவர்

மனதைக் கொள்ளைகொள்ளும். இங்ஙனமே பஞ்ச மூர்த்திகள் கோயில் முன் மண்டபத்தில் பன்னிரண்டு உருவங்கள் காணப் படுகின்றன. இவைகளிலுள்ள சிற்பச் சிறப்பு என்னவென்றால், மரத்திலே கூடச் செய்து முடிக்க முடியாத அவ்வளவு நுட்ப மான வேலைப்பாடுடையன இக் கல்லுருவங்கள்.

## புராண வரலாறு.

தென்காசித் தலபுராண ஆசிரியர் தென்காசியின் கீழைப் பகுதியாகிய புலியூரிலுள்ள சைவமடாதீனம் சந்திரசேகரக்குரு பரம்பரையில் நாற்பத்திரண்டாவது தலைமுறையில்வந்த அழகிய திருச்சிற்றம்பல தேசிகராவார். இவர், குமார கவிராய தேசிக ரென்றும் பெயர் பெறுவார். இவர் திருமடத்தை நிலை நிறுத்தியவர் தில்லைகண்ட குலசேகர பாண்டியர். இவர் காலத்தில் தென்காசியில் வாழ்ந்து வந்த பெரியார் சொக்கலிங்க பிள்ளை முதலானோர் வேண்டிக்கொள்ள, கொல்லம் 1016-ம் ஆண்டில் பாடப்பெற்ற இப்புராணம் கொல்லம் 1030-ம் ஆண்டில் அரங்கேற்றப்பெற்றது என்பது அப்போது, உடனிருந்த சங்கரலிங்க பிள்ளை என்பவர் கூறிய சிறப்புப் பாயிரத்தால் புலனாகின்றது. இதற்குக் குறிப்புரை யெழுதிப் பதிப்பாசிரியராயிருந்த பெரியார், பேட்டை, புராணிகர் த. ஆறுமுகநயினார் பிள்ளையவர்களாவார்.

" **ஆயிரத்துப் பதினாறு மாண்டிற்பங்** குனியினிரு பத்தே மூநாள்
தூயிரதி சோதிதுலா லக்கினத்தில் தென்காசித் தொல்பு ராணம்
பாயிரத்தோ டாயிரத்தெண் ணூற்றிருபத் தெட்டுப்பாப் பகர்ந்து முற்றிற்
றேயிரவும் பகலுவிசு வேசனன்பார் குமாரகவி யெழுது மீதே "

(தென்காசிப் புராணம் - கடைசிப் பாட்டு.)

" ஆற்றலழ கியதிருசிற் றம்பலராங்
குமாரகவி ராய வாசான்
நூற்றதென்கா சிக்கதையான் **டாயிரத்து
முப்பானி** னேன்மை வேண்மார்

23



மஹா விஷ்ணு

பாற்றிலகன் சொக்கலிங்க மான்முதலோர்
வேண்டுவண்ணம் பலருங் கேட்பா
னேற்றிறைபா லுலகம்மை திருமுனர்வைத்
தன்பொடரங் கேற்றி னனே ''

(சங்கரலிங்க பிள்ளை சிறப்புப் பாயிரம்.)

இத் தலபுராணம் சிறந்த வாக்காக இருப்பதோடு உயரிய கருத்துக்கள் மலிந்திருக்கும் மேன்மையது. இதனுள் கூறப்பெற்றிருக்கும் வரலாறுகளை மிகச் சுருக்கமாகக் கீழே கூறுவோம்.

## (1) நாரதரும் கவுசிகனும்.

ஒரு நாள் நாரதமுனிவன் இந்திரனுடைய சபையை யடைந்து இந்திரனைப் பலபடப் புகழ்ந்து பாடினன். அரிமித்திரன் என்பவன் பொறாமை கொண்டு திருமாலை அடைந்து " உன்னையும் இந்திரனையும் சமப்படுத்தி நாரதன் பாடினன் " என்னலும், திருமால் சினங்கொண்டு " நாரதன் யாழிசையும் கண்டமும் அழிக, " எனச் சபித்தான். பின் அவன் தன்னை வந்தடைந்த நாரதனை, " தென்காசி சென்று பணிந்தால் சாபம் நீங்கும் " என்று அனுப்ப நாரதன் தென்காசி வந்தடைந்து சித்திரையாற்றில் நீராடிச் சிவபூசனை புரிந்து, விசுவநாதரையும், உலகம்மையையும் வணங்கிச் சாப நீக்கம் பெற்று, பெருமான் திருமுன் பாடி நின்றான். பின் பெருமான் அசரீரியாக உரைத்தபடி நாரதன் வடகிழக்குத் திசையிலுள்ள தீர்த்தத்தில் நீராடிக் கன்னிமார் காட்டக்கண்டு, கூகை வடிவமாக வந்த கவுசிக முனிவனின் அருளுபதேசமும் பெற்றான்.

## (2) இந்திரனும், மைநாகமும்.

மலைகள் சிறகுடன் பறந்து பல ஊர்களை அழித்துத் துன்புறுத்த மண்ணரசர் இந்திரனிடம் முறையிட்டனர். இந்திரன் தென்காசிக்கு வந்து தவம் புரிந்து வல்லமை பெற்று மலைகளின் சிறகுகளை அறுத்தான். அதுகண்ட மைநாகமலை

தென்காசிக்கு வந்து பூசை செய்தது. பெருமான் தோன்றி "மைநாகமே! நீ தென் கடலில் மூழ்கியிரு. உன் சிறகை இந்திரனுல் அறுக்க முடியாது." என வரம் அருளினூர். இதனை அறியாமல் இந்திரன் தன் வச்சிராயுதத்தை ஏவ, அது வலியிழந்து கூர்மழுங்கிற்று. இந்திரன் மறுபடி தென்காசிக்கு வந்து பணிந்து வச்சிரத்தின் கூர்பெற்ருன். பெருமான், "இந்திரா! நீ தான் வெற்றிபெற்ருய், மைநாகம் தென்கடலை விட்டு வெளிவராது, வந்தால் நீ அதை அழித்துவிடலாம். இப்படி நாம் வரம் தந்திருக்கிறேம்." என்றருள் செய்தார்.

## (3) அகத்தியர்.

இமையமலை மேல் சிவபெருமான் பார்வதியைத் திருமணம் புரியச் சென்றபோது பூமியின் வடதலை தாழ்ந்து தென்தலை உயர்ந்தது. அப்போது சிவனுர் அகத்திய முனிவரை நோக்கித் தென்மலையை அடையக் கட்டளையிட்டார்; அங்கே அவருக்குத் தமது திருமணக் காட்சியைக் காட்டியருள்வதாகவும் வாக்களித்தார். அகத்தியர் அங்ஙனமே விந்தமலையை அடக்கிக் காவிரியைச் சோழ நாட்டிலே விடுத்து, செண்பகக் காட்டை யடைந்து அங்கே உலகாளையும் பெருமானையும் கண்டு வணங்கி யிருந்தார். பங்குனி உத்திரத்தில் சிவனுருக்கும் பார்வதியம்மையாருக்கும் திருமணம் நடைபெற்ற காட்சியைச் செண்பகக் காவிலிருந்தபடியே அகத்தியர் கண்டார். அக்காட்சியை யாவருக்கும் காட்டவேண்டுமென்று அவர் வேண்டிக்கொள்ள, சிவபெருமான் ஐப்பசி மாதம் உத்திரத்தில் காட்டுவதாக வாக்கருளினுர்.

## (4) குலசேகரபாண்டியர்.

மாறன்மங்கலத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்த குலசேகரபாண்டியர், பிள்ளையில்லாமல் மனம் வாடியிருக்கும்போது சிவனுர் அவர் கனவிலே தோன்றி "மலையத்தின் அடியிலுள்ள செண்பகவனத்தில் வந்து எம்மை வழிபடு" என்றருள, அவர் தம் மனைவியோடு அங்கு வந்து சேர்ந்து அங்கிருந்த முனிவர்களை வணங்கி அவர்களின் உதவி

யினுலே செண்பக நிழலில் வாழும் பெருமானையும், இருவாச்சிக் கீழ் அமரும் பெருமாட்டியையும் கண்டு பணிந்தார். சிவனுர் இலிங்கத்திலே தோன்றி வரம் அருள அதன் பலனுக உலகநாத பாண்டியர் பிறந்தார். உலகநாதருக்குச் சோழன் மகள் பொன்மாலையை மணமுடித்து முடிசூட்டிக் குலசேகரர் அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு நாள் செண்பக வனத்தை அடைந்து உலகம்மையையும் உலகநாதரையும் பணிந்தார். அது முதல் அவர் அங்கேயே அழகான தவச்சாலையாக ஒரு திருமடம் அமைத்துத் தவம் செய்திருந்து சிவனுரது உலகமடைந்தார். அத்தவ இடமே குலசேகரமுடையார் திருக்கோவில்.

## (5) குழல்வாய்மொழியம்மை.

உலகநாத பாண்டியரும் பிள்ளையில்லாக் குறையால் வருந்தி, தம்மையருளிய உலகநாதரை அடைந்து பணிந்தார். பெருமான், " உலகம்மையே உனக்கு மகளாக வருவாள்; அவள் திருமணத்தின் பின் உனக்கு மகன் பிறப்பான் " என்றருளினுர். அங்ஙனமே உலகம்மை ஒரு பெண்ணுகிப் பாண்டியரையும் அவர் மனைவியையும் அணுகி " அம்மா, அப்பா " என அழைத்தாள். அசரீரிப்படி **குழல்வாய்மொழி யம்மை** என்ற பெயர் அம்மைக்கு இடப்பெற்றது. ஏழு முனிவர்களுடைய மனைவிமாரும் ஏழு கன்னிகைகளாகி அம்மைக்குத் தோழியராயினர். அம்மை கன்னிமாடத்தில் இருந்தாள். சித்திரையாற்றைத் தன் சோலையின் நடுவே ஓர் ஓடையாய்த் திருப்பி அதன் கரையில் பூசனைமடம் அமைத்து அவள் நாடோறும் சென்று பூசனை புரிந்து வந்தாள். ஒரு நாள் பெம்மான் வேலியின் புறத்தே வந்து பெருமாட்டியைக் கண்டு " நாளை விடைமீது வருவேம். உன் தந்தையிடம் மணம் பேசி ஐப்பசி உத்திரத்தில் உன்னை மணப்பேம் " என்றருளினுர். களவியல் நடாத்திக் காட்டுவான்போன்று இறைவர் மறுநாள் விடைமேற்கொண்டு காட்சி தந்தார். குழல்வாய்மொழித்தாயும் காதல் கொண்டவள்போல் நடித்தாள். பெருமான் ஒரு குறத்தியாகி வந்து அம்மைக்குக் குறிசொல்லுகின்றுர். முனிவர் பாண்டியரை அடைந்து திருமணம் தீர்மானிக்கின்றனர்.

குலசேகர பாண்டியர் தவச்சாலையே குலசேகரமுடையாருக்குத் திருமணச் சாலையாயிற்று. திருமணம் முடிந்தவுடன் பணிந்து நின்ற உலகநாத பாண்டியரை நோக்கி,

" அந்தையா கியகுல சேகரன் இவ்விடை
நோற்றெமைப் பூசைசெய் திருத்தும்
அந்தநா ளில்குல சேகர முடையவ
ராய்க்குழல் வாய்மொழித் தாயாய்
வந்தருள் செய்தாதல் அப்பெயர் கொண்டிவண்
வதிகுவேம் கோயிலொன் றமைத்தி. "

எனப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிக் கோவிலிற் புகுந்தார். அங்ஙனமே பாண்டியர் கோவில் அமைத்து வணங்கி மாறன் மங்கலத்துக்கு வந்திருந்தார். அவருக்குக் குலசேகரன் என ஒரு ஆண் மகன் பிறந்தான்.

## (6) மிருகண்டு.

கடலூர் வாழும் குச்சிகன் மகன் கவுசிகன் தவம்புரிய, திருமால் அவன் முன் தோன்றி " மிருகண்ட! நீ தென்காசி போய் உலகநாதன் அடிபணிந்து அருள்பெற்று மணம் செய் " என்று உரைத்தருளினன். மிருகண்டு தந்தை தாயோடு தென்காசியை யடைந்து வழியில் அகத்தியர் அருளையும்பெற்று ஆதிபகவன் திருவருளும் அடைந்தான். பின் அவன் தன் தாய் தந்தையரோடும் கடவுளையடைந்து மருத்துவதியை மணந்து மார்க்கண்டனைப் பெற்றுத் தென்காசிப்பெம்மான் திருவருளைத் துதித்திருந்தான்.

## (7) குடிலை உபதேசமும் தரணி பீடமும்.

சிவபெருமான் பதுமாதனத்திருந்து உலகம்மைக்குக் குடிலையுபதேசம் செய்தருளினர். குடிலை என்பது ஓம். "**மந்திரராச ஓங்காரம்,** பூவழங்கும் ஒலியில் பொதுவதா யிடினும் **பொறிவடிவினில் தமிழ் ஆமால்,** "

29



அக்னி வீரபத்திரர்

31

" ஒலிவரி வடிவம் அனுதியாய்த் தமிழ்க்கே
உள, எழுத் திலாமொழி வடசொல்
மலிபிர ணவந்தான் வடிவிலா தொழியின்
மற்றதைப் பதிட்டைசெய் திறைஞ்சிக்
கலிதவிர் வோர்ஆர்? மயேச்சுர தலத்து
ஓங்காரமே சிவார்ச்சைசெய் ததுவாப்
பொலிவுசெய் துரைக்கும் புராணமும் உளதால்
**புகலும் ஓம் தமிழக மறையே.** "

" சிவன் எழுந் தருளும் பிரணவ பீடம்
திகழ்திரு வாசிஎன் றிடப்பட்
டிவர்தரு வழக்கும் தமிழ்எனல் காட்டும். "

(தென்காசித் தலபுராணம்.)

*சிவபெருமானுடைய சத்தியின் யந்திரமாம் ஆலயம் தான் நாற்பது முக்கோணம்; இதுவே தரணி பீடமாகும். இது அடியார் வேண்டுவனவெல்லாம் சித்திக்கச் செய்வதால் சித்தி பீடமென்றும், கலைஞானங்களையெல்லாம் அருள்கையால் கலைப் பீடம் எனவும் நாற்பத்து முக்கோணமாதலினுல் போக பீடமென்றும், எல்லா உருவும் தரும் சீரினுலே தரணிபீடம் எனவும் பெயர் பெறும்.*

## (8) நந்தி.

*சிலாதரமுனிவன் தென்காசியை அடைந்து பிள்ளைப் பேறு அருளுமாறு தவமிருந்து கடவுள் அருளால் கொழுவினுல் உழுத பூமியில் ஒரு பிள்ளையைப்பெற்று நந்தி என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். ஒரு நாள் அப்பிள்ளையைக் கண்ட முனிவர் " இவன் இன்னும் ஓராண்டுதான் இருப்பான் " என்றனர். தந்தை சிலாதரன் கவன்றுன். நந்தி இதனையறிந்து தென்காசிப் பெருமானை யடைந்து பணிந்தான். காசிவிசுவநாதர், " நந்தி! உனக்கு அழிவே கிடையாது, " என்றருளி, உலகம்மையால் நந்திக்கு ஞானம் ஊட்டி, தம் கையினுலேயே முடிசூட்டி, தம் கணங்களுக்கெல்லாம் தலைமை தந்தனர், தாய் தந்தையர் மகிழ நந்தி பொன்னெளிர் மேனி பெற்று விளங்கினன். உலகநாதர்*

ஆணைப்படி கணங்களெல்லாம் ஒன்றுகூடி நந்தியை உயர்ந்த சிங்காதனத்திலே வைத்து முடிசூட்டி விழாச்செய்து வணங்கி, சுயேச்சையாம் திருவை மணமுடித்துப் பணிந்து நின்றனர். அதுமுதல் அவன் பெருமான் திருமுன்பு அதிகாரம்புரி பெரியனுய்த் திகழ்ந்தான்.

## (9) சிரும்பாசுரன்.

வச்சிரவாகு நான்முகனிடம் பெற்ற வரத்தால் ஓர் ஆண் குழந்தையைப் பெற்ருன். அப்பிள்ளையின் தாய் தூலகண்ட முனிவன்மேல் கட்டெறும்புகளை வாரிக் கொட்டியதால் அம்முனிவன் எறும்பைப் பெறுவாய் எனச் சபித்துப் பின் வச்சிரவாகு வேண்டுதலுக்கு இரங்கி எறும்பு முகனைப் பெறுவாய் என அருளினன். அம் முனிவன் சொற்படி அப் பிள்ளையாகிய சிரும்பாசுரன் காவிரியின் தென்கரையில் சிவாலயம் கட்டி வணங்கி அழியாவரம் பெற்ருன். அதனுல் திருமால், நான்முகன் முதலிய தேவர்களை யெல்லாம் போருக்கிழுக்க, அவர்கள் தென்காசிக்கு ஓடிவந்து உலகம்மையைச் சரணடைந்தனர். சிரும்பன் சிறந்த ஞானி. ஆதலின் உலகம்மை கையால் உடலை நீத்து அவள் திருவடிப்பேறு பெறத்துணிந்து, அம்மையோடு போர் தொடுத்தான். அவள் சூலத்தை ஏவினுள். அதனுல் துளைக்கப்பட்டு அவன் அம்மையின் திருவடியில் விழுந்து வேண்டித் திருவருள் பெற்ருன். போர் முனைந்த உலகம்மை வடக்குவாய்ச் செல்வியாகி, அரசருள் நங்கையாய் இக்காலத்தில் அரசூர் நங்கை என்னப்படுகிருள். அரிகேசரி பராக்கிரமன் அவளுடைய கோவிலைக் கட்டியமையால் இடைக்காலத்தில் அம்மை அரிகேசரி நங்கை எனவும் அழைக்கப்பெறுகிருள்.

## (10) வாலி.

கிட்கிந்தை மன்னன் வாலி. அவன் தென்காசியில் உள்ள வாலியம் பொற்றையை அடைந்து, அங்குள்ள குகையில் தங்கி முக்கூடலில் முழுகி வாலி நாதனை நிறுவிக் காசிவிசுவநாதரையும்

33

வழிபட்டு, ஆறு மாதம் தவமிருந்து "எதிர்த்தவர் பலம் பாதி உனக்கு எய்தும்" எனும் வரமும் பெற்ருன். பின் அவன் பிரமதேசத்தின் வடமேற்கில் கூனையாற்றங்கரையில், வாலீச்சுரம் கண்டு வழிபட்டு, கடலாட எண்ணி **உவரி** என்ற ஊரை அடைந்து தான்ருேன்றி நாதனை வணங்கி இலங்கேசன் இராவணன் நட்புப்பெற்றுக் கிட்கிந்தையை அடைந்தான்.

## (11) கண்ணுவர்.

கண்ணுவ முனிவர் தென்காசி வந்து சித்திரையாற்றின் வடகரையில் தவமிருந்து பெருமானுடைய ஆனந்த நடனக் காட்சியைக் கண்டார். நடனக் காட்சியருளிய இடம் புலியூர். கண்ணுவர் நிலைபெறுத்திய கோவிலே புலியூர்க்கோவில். ஆடிய பெருமான் அமர்ந்தருளியது வேங்கைமர நிழலில், இங்கே தையமாவாசையில் மணிகருணைத் தீர்த்தமாடி இறைவரை வழிபடுவோர் நினைத்தனவெல்லாம் கைகூடப்பெறுவர்.

## (12) செண்பகபாண்டியர்.

முன் மாறன்மங்கலத்தில் உலகநாத பாண்டியருக்குக் குலசேகரன் பிறந்தான் என்று கூறினேம். அவன் வழியில் விந்தன் என்பவன் புகழ்பட வாழ்ந்தான்; அதனுல் அவ்வூர் விந்தன்நல்லூர் எனவும், விந்தை எனவும் பெயர் பெறும். அவன் பேரனே செண்பகபாண்டியர் என்னும் பராக்கிரம பாண்டியர். அவர் சேரனேடு போர் புரிந்து வென்ருர்.

ஒரு நாள் முருகப்பெருமான் முனி உருவங்கொண்டு பாண்டியர் படுக்கையறையிற் புகுந்து படுத்திருந்தார். அருகில் முருகன் கோவிலில் பெருமானையும் வள்ளி தெய்வானையையும் வழிபட்டிருந்த மன்னருக்கு முருகப்பிரானுடைய உடலிலிருந்து ஒரு புது மணம் வீசியது. அதனைப் பின்பற்றிய பாண்டியர் தூங்குவார்போல இருந்த முருகனை வந்து கண்டவுடன், ஓர் உருண்டை பெருமான் வாயிலிருந்து வெளிவந்தது. ஆறுமுகன் அக் குளிகையைப் பாண்டியரிடம் தந்து மந்திரமும் அருளி

மறைந்தனர். பராக்கிரமன் அதனுதவியால் நாடோறும் பிறரறியாமற் காசி சென்று வழிபட்டுவந்தார். இதையறிந்த அவர் மனைவி வில்வவதி தன்னையும் அழைத்தேக வேண்டினாள். முருகனும் தோன்றி "அது செய்" என்ன, மன்னவர் மனைவியையும் உடன் அழைத்துச் சென்றார். காசியிலிருந்து வரும் வழியில் மதுரையில் அரசி பூத்தாள். அதனால் இருவரும் நான்கு நாள் மதுரையில் தங்கி ஐந்தாம் நாள் சொக்கரை வணங்கினர். பெருமான், "ஊர்ப்பக்கத்தில் காசி காண்" என அருளினர். மன்னர் ஊரையடைந்து செண்பகவன முனிவரைக்கண்டு **காசி** காட்ட வேண்டினர். அப்போது வானொலி, "சித்தராகி உலகேசன் உனக்கு அருள் செய்வான்" என ஒலித்தது. அன்றிரவு உலகநாயகர் அவர் கனவிலே தோன்றி "உன் முன்னோன் குலசேகரனுக்கு நாம் அருள் செய்தோம். அவன் மகன் உலகநாதனுக்கு மகளாகிய உலகம்மையாம் குழல்வாய் மொழியாளை மணந்தோம். இங்கிருந்து மேற்கே அரைக்காவத தூரத்தில் நாம் இருக்கிறோம். அவ்விடமே **தென்காசி.** நாளை இங்கிருந்து ஓர் எறும்பொழுக்கு அவ்விடம் வரையில் போகும். அதைத் தொடர்ந்து செல், நாமும் விடைமேல் வந்து அருளுவோம்" என்றருளினர். பராக்கிரம பாண்டியர் "இங்கு தென்காசியிருந்தும், அப்பிரான் என் குலதெய்வமாக இருந்தும் நான் அவரைக் காணாது இருந்தேனே" என்று மகிழ்ந்து தனது வழுபடு கடவுளாகிய ஆறுமுகனையும் வாழ்த்தினர். விடிந்தவுடன் செண்பக பாண்டியர், எறும்பொழுக்கின் வழியே சென்று சித்திரை யாற்றின் கரையிலே **நந்தியைக் கண்டு அதனருகிருந்த மடுவிலே சிவலிங்கப்பெருமானையும் கண்டார்.** பின் கடவுளருளால் **கோவிலும் கட்டி, தென்காசி நகரையும் அமைத்துப்** பரம்பொருளை நாடோறும் வழிபட்டு அருள் பெற்றார். இப்பாண்டியர் காசி கண்ட பராக்கிரம பாண்டியர் எனவும், அரிகேசரி தேவர் எனவும் பெயர் பெறுவார்.

**வழிபடுவதால் ஏற்படும் பயன்:-** விசுவநாதரையும் விசாலாட்சியையும் வழிபடுவதால் இன்பம் ஓங்கும். தீமை



மன்மதன்

நீங்கும், பகை மாயும், வெற்றி பெருகும், அறிவோங்கும். திருமணம் ஆக்கும், பிள்ளைப்பேறு அருளும், செல்வம் பெருக்கும், பிணியெல்லாம் போக்கும், வறுமை நோய் அழியும். இறைவர் திருவருள் வளரும்.

**அருச்சனை, முழுக்கு;-** நான்கு கால முழுக்கும் அஷ்டோத்திரம், திரிசதை, சகஸ்ரநாமம் என்னும் அருச்சனைகளும் இங்கே நடைபெறுகின்றன. கட்டணம்: அஷ்டோத்திரத்துக்கு 12 நயே பைஸே, திரிசதைக்கு 20 நயே பைஸே, சகஸ்ரநாமத்துக்கு 36 நயே பைஸே.

**திருவிழாக்கள்:-** மாசித் திருவிழாவே பெரிய திருவிழா. ஐப்பசி மாதம் திருமண விழாவும், ஆவணி மாதம் தெப்ப விழாவும் நடைபெறுகின்றன.

## சரித்திர வரலாறு.

தென்காசி யென்று வழங்குகிற ஊர் ஆதியில் செண்பக வனமாக இருந்தது. இப்போது குற்றாலத்தலம், செண்பகாடவி இவையெல்லாம் இச் செண்பகவனத்தின் பகுதிகளே. **மாறன் மங்கலம்** என்ற ஊரில் ஆண்டிருந்த **குலசேகர பாண்டியரே** முதன் முதலாகத் தென்காசி விசுவநாதரையும் உலகம்மையையும் கண்டு வழிபட்டு **உலகநாதன்** என்ற பிள்ளையைப் பெற்றார். உலகநாதனுக்கு உலகம்மை குழல்வாய்மொழி என்ற பெயருடன் மகளாகவர விசுவநாதப் பெருமான் விடைமேல் வந்து அம்மையைத் திருமண முடித்தருளினர். திருமணம் நடந்த இடம் குலசேகர பாண்டியர் தவம் புரிந்திருந்த இடமே. அதுவே **குலசேகரநாதசாமி கோவில்** என்று இப்போதும் வழங்கப்பெற்று வருகிறது.

இக் கோவில் தென்காசியிலிருந்து திருநெல்வேலிக்குப் போகும் சாலையில், உலகம்மை கோவிலிலிருந்து கிழக்கே முக்கால் மைல் தூரத்தில் மிகப் பெரிதாக விளங்குகின்றது. சீர் கேடாகக் கிடந்த இக்கோவில், தருமகர்த்தர்களின்

முயற்சியால் சீர்திருத்தப் பெற்றிருக்கிறது. கோவிலின் தலைப்பில் பெரிய கோபுரத்திற்கு அடிகோலப்பெற்றிருக்கிறது. உள்ளே நுழைந்தவுடன் திருக்கலியாண மண்டபமும், மிகப் பெரிய திரிகூட மண்டபமும் இருக்கின்றன. குலசேகரநாதர் கோவிலும், குழல்வாய்மொழியம்மை கோவிலும் தனித்தனியாக அமைந்திருப்பதோடு கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மாமண்டபம், மணிமண்டபங்களோடு காணப்பெறுகின்றன. கருவூல அறையிலிருந்து கீழே இறங்குபடியும் கீழ் மண்டபமும், சுரங்க வழியும் உள்ளன. இவ்வழி உலகநாதர் கோவில்வரை செல்லுவதென்று சொல்லப்படுகிறது. வெளிச் சுற்றில், மகிழமரமொன்றும், செண்பகமும், வனமாக மாவிலங்கும் வளர்கின்றன. இக்கோயிற் பக்கத்திலுள்ள பொதுமக்கள் ஒவ்வொரு திருவாதிரை விழாவிலும், காசி விசுவநாதர் கோவிலிலிருந்து ஒரு நடராஜப் பெருமானை அழைத்துச்சென்று விழா விமரிசையாய் நடத்தித் திரும்பக் கொண்டுவந்து விடுவது வழக்கம். இந்தக் கோவிலுக்கு அரை மைல் தூரம் கிழக்கே புலியூர் இரயிலடிக்கு அருகே **சிதம்பரேஸ்வரர்கோவில்** இருக்கிறது. இக்கோவில்தான் **கண்ணுவ முனிவர்** நிலைபெறுத்தி வணங்கி ஆனந்தத் தாண்டவக் காட்சிபெற்ற இடம். இதில் சிதம்பரேஸ்வரர் கோவிலும், சிவகாமியம்மை கோவிலும் கருப்பக்கிரக, அர்த்த மண்டப, மாமண்டப, மணி மண்டபங்களுடன் விளங்குகின்றன. இது விரைவில் அப்பக்கத்தில் வாழும் குடிகளின் நன் முயற்சியால் நல்லநிலையடைதல் வேண்டும். தெய்வம், கொண்டாடும் இடத்தில்தானே விளங்குவதாகும்!

உலகநாத பாண்டியருக்குப் பிறகு பல பாண்டியர்கள் மாறன்மங்கலத்திலிருந்து ஆண்டதாகத் தலபுராணம் கூறுகிறது. விந்த பாண்டியர் பெயரால் மாறன்மங்கலம், விந்தன்நல்லூர் எனப் பெயர் பெற்றமை முன்கண்டோம். விந்தனுடைய பேரனாகிய அரிகேசரி தேவர், பராக்கிரம பாண்டியர், செண்பக மாறன் என்னும் பெயர்களோடு அவர் காலம்வரை தென்காசிப் பெருமான் செண்பக

39

மரத்தடியில் இருந்து வந்தார். உலகம்மை பவள மல்லிகை நிழலில் இருந்தாள். காசிகண்ட பராக்கிரமபாண்டியர் கடவுள் ஆணைப்படி தென்காசிக் கோவிலைக் கட்டி முடித்து, நகரமும் அமைத்தார். தென்காசித் திருக்கோவில் கட்டப்பெற்ற காலம் சாலிவாகன சகாப்தம் 1368-ம் ஆண்டு எனத் தலபுராணம் கூறுகின்றது.

" ஊன்று **சாலிவா கனசகம் ஆயிரத்தோடு**
**மூன்றுநூற் றறுபானெட்டின்** முதுமதிக் குலத்துத்
தோன்று மாண் **அரிகேசரி தேவனுத்** துலங்கிச்
சான்று காண்**பராக் கிரமனன்** றெடுத்ததித் தலமே. "

(தலவிசேடம் 18-ம் பாட்டு)

சாலிவாகனன் ஆண்டுக்கு ஆங்கில ஆண்டு எழுபத்தேழாண்டு அதிகம். அதனுல் 1368+77 = கி. பி. 1445. கொல்லம் ஆண்டு 620, கி. பி. 1445-ல் தென்காசிக் கோவில் கட்டி முடிக்கப்பெற்றது. இதன் பின்னுல் சேர்க்கப் பெற்றிருக்கும் கல் வெட்டுக்களில் கோபுரம் தென் சுவர் முதலாவது பாடலில் " சகாத்தம் ஆயிரத்து முந்நூற்றறுபத் தெட்டில்... தரிழ்சணை தான் செய்வித்தானே " என்பதும் இதனை வலியுறுத்துகின்றது. கல்வெட்டில் அடுத்த பாட்டில் " சகாத்தம் ஆயிரத்து முந்நூற்றறுபத்தொன்பதின்... உடையவரைத் தென்காசிச் சிவாலயத்தி னுள்ளமைத்துத் தெள்ளமுத மூட்டினனே " எனக் காணப்படுவதால் அடுத்த வருடம் 1446 திருவிழா மூர்த்தியைக் கோவிலுள்ளே கொண்டு சேர்த்து வணங்கினர் என்பது புலனுகும்.

கோபுரத் தென் சுவர்க் கல்வெட்டில் " பன்னு கலியுகம் நாலாயிரத் தைஞ்ஞூற்றைம்பத் தெட்டில்... தென்காசி நகரில்...... பராக்கிரம மகிபன்......கோபுரமுங் காண...... உபான முதல் தொடங்கினனே " என்பது காணப்படுகிறது. அதாவது கோபுரம் தொடங்கிய காலம் கலி 4558. இதற்கடுத்த பாட்டில் " சகாத்தம் ஆயிரத்து முந்நூற் றெழுபத் தொன்பதின்மேல்...... உபான முதல் கோட்டினனே "

என்றிருப்பதனுல் அவ்வாண்டு சகம் 1379. சகத்தைக் காட்டிலும் கலியாண்டு 3179 ஆண்டு மிகுந்தது. ஆதலின் இக் கணக்குப் பொருத்தமானதே.

கோபுரம் வடசுவர்க் கல்வெட்டில் "தென்காசிக் கோபுரக் கற்பணி ஆருண்டில் முடித்துக் கயிலே சென்ருன்... பராக்கிரம பாண்டியனே" என்பது காணப்படுவதால் கோபுரம் தொடங்கி (அதாவது சாலி சகம் 1379, கி. பி. 1456) ஆருண்டுகளில் அதாவது கி. பி. 1462-ல் பராக்கிரம பாண்டியர் காலமானுர் என்பது தெரியவருகிறது. மாமண்டபம் தென் சுவர்க் கல்வெட்டாலும் "விண்ணுடர் போற்றும்" என்ற பாட்டினுலும், சடிலவர்மன் என்ற குலசேகர தேவர் பராக்கிரமனுக்குத் தம்பி என்பதும், அவர் தம் தமையனுர் குறையாக விட்ட கோபுரத்தைக் கட்டி முடித்தார் என்பதும் தெளிவாகின்றன. "ஓங்கு நிலே ஒன்பது" என்ற பாடலினுல் அக்கோபுரம் ஒன்பது தட்டுக்களுடையதாக இருந்தது என்பது தெரியவருகிறது.

கோபுரம் வடசுவரிலுள்ள கட்டளேக் கலித்துறை களால் பராக்கிரம பாண்டியருடைய பக்தி ததும்பும் உள்ளக் கிடையும் பணிவும் தெளிவாக விளங்குகின்றன. கடைசியில் சேர்க்கப் பெற்றுள்ள அரிகேசரி தேவர் சாசனத்தால் (கி. பி. 1450) இப்பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டியர் தென்காசிக் கோவிலுக்குக் கொடுத்துதவிய சொத்துக்கள் இவையென்பது புலனுகின்றது.

சாலிவாகன சகாப்தம் 1447. கொல்லம் ஆண்டு 700= கி. பி. 1524-ல். திருவாங்கூரைச் சேர்ந்த ஜெயதுங்க நாட்டு மன்னர். சங்கரநாராயண பூதல வீரமார்த்தாண்ட ராமவர்மன் இக்கோயிலிற் பழுதுகள் பார்த்துச் செப்பனிட்டு பிரமகலசா பிஷேகஞ் செய்வித்ததாகவும், பூஜைகளும், மற்ற நிர்வாகங் களும் ஒழுங்காய் நடைபெற ஏற்பாடு செய்ததாயும்; சென்னே அரசாங்கத்துக் கல்வெட்டு இலாகா 6—9—18-ல் வெளியிட்ட

41



ரதிதேவி

43

அறிக்கை 58-ம் பக்கம் 576-வது இலக்கக் குறிப்பு அறிவிக்கின்றது.

பின்னர், கொல்லம் ஆண்டு 1023 = கி. பி. 1848-ல் இக்கோயிலில் ஓர் "கும்பாபிஷேகம்" நடந்திருப்பதாக மேலகரம் ஷெண்பகக்குற்றாலக் கவிராயர் பாடிய பாடல் களிலிருந்து வெளி வருகிறது. (இப்பாக்கள் இன்னும் ஏட்டுப் பிரதியிலேயே இருந்து வருகின்றன.)

112790

காலப்போக்கினால் இக்கோயிலில் அநேக கட்டடக் குறைபாடுகள் ஏற்பட்டன, தட்டோடு முழுதும் சீர்கேடான நிலைமையடைந்து, எங்கு பார்த்தாலும் வெடிப்புகள் தோன்றி, மழைக் காலங்களில் மழைத்தண்ணீர் ஒழுக்கெடுத்து கோயிலுள் விழுந்து ஓடியும், பிரகாரங்களில் சுவர்கள் வழியாய்க் கசிந்தும் பலவீனம் செய்தது. வாய்க்கால்கள், ஓடைகள் நிறைந்து, மரங்கள், செடிகள், வளர்ந்து ஓர் வனமாகக் காட்சியளித்தது. உள்நுழைவதற்கே பயமாயிருந்தது. மதிற்சுவர்களின் மேல் பாகங்களில் சில இடங்களில் கட்டப்படவேயில்லை. சுவாமி கோயில், அம்மன் கோயில், கர்ப்பக்கிரக விமானங்களும், அர்த்த கோபுரங்களும் மங்கி க்ஷீணித்தன. விமானங்களிலுள்ள உருவங்கள். விக்ரகங்கள் உடைந்தும் நொறுங்கியும், பின்னமாகியும் மங்கியும், மழுங்கியும், இனமே தெரியாமலிருந்தன. தக்ஷிணா மூர்த்தி கோயில் முழுதும் கெட்டு எப்போது விழுவதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. கோயில் தன் பார்வையை முற்றிலும் இழந்து நொந்து கொண்டிருந்தது. சுற்றுக்கோயில்கள் பல க்ஷீணித்தன. இவற்றைக் கவனித்துச் செம்மை செய்யக் கோயிலில் போதிய வருமானம் கிடையாது. காலந் தாமதித்தால் நிலைமை இன்னும் மோசமாகி விடுமோ, திருத்தவும் முடியாது போமோ என அஞ்சி, இவ்வூர் பொதுமக்கள் 14—12—'45 / 1121-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ம் தேதி கூடி, இக் குறைகளை நீக்கத் திருப்பணி செய்யவேண்டுமென்றும், அதற்காகப் பல இடங்களுஞ் சென்று பண உதவி தேடவேண்டுமென்றும், திருப்பணி இறுதியில் ஓர்

O.83:38. 21147

கும்பாபிஷேகமும் நடத்திவைக்க வேண்டுமென்றும் தீர்மானித்து, இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஓர் கமிட்டியை இலஞ்சி உயர்திரு. I. C. ஈஸ்வரன் பிள்ளையவர்கள் தலைமையில் நியமித்தார்கள்.

இக் கமிட்டியார் தங்கள் கடமைகளை மிக ஆர்வத்துடன் திறம்பட நிறைவேற்றினுர்கள். இக்கோயில் தர்மகர்த்தர்களான **திரு. V. M. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், T. A. மகராஜ பிள்ளையவர்கள், V. P. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும்** மனமுவந்து ஒத்துழைத்தார்கள். சலியாமல் உழைத்துப் பல ஊர்கள் சென்று ரூபாய் 31000-க்கு மேல் ரொக்கப் பணமும், பட்டு, பரிவட்டம், ஏராளமான சாமான்களும் சேகரித்தார்கள். திருப்பணி வேலைகளையும் கண்ணுங் கருத்துமாய்ச் செய்து முடித்தார்கள். இவர்களுடைய அன்புப் பணிகளால் கோயிலின் பழைய சீர்கேடான தோற்றம் முற்றிலும் ஒழிந்தது. குறைகளெல்லாம் நீங்கித் தூய்மையும், வனப்பும், கவர்ச்சியுமான கோயிலாகத் திகழ்கின்றது. வழிபாடு செய்கின்றவர்களுக்கும் அதிக வசதிகள் அமைந்திருக்கின்றன. இதற்கு முன் நெற்களஞ்சிய மாய் சுவாமி கோயில் அம்மன் கோயிலுக்கு நடுவேயிருக்கும் தனிக்கோயில் இப்போது, கணபதி, உலகம்மன், உமாமஹேஸ்வரர், சுப்பிரமணியர், சண்டேசுரர் முதலிய பஞ்ச மூர்த்திகளும் ஒரே இடத்தில் எழுந்தருளி ஏக காலத்தில் தரிசனம் கொடுக்கும் ஸ்தலமாக மாறி விளங்குகின்றது. நடராஜரையும் தரிசிக்கலாம்.

திருப்பணி கும்பாபிஷேகம் 1123-ம் ஆண்டு சித்திரை மாதம் 9-ம் தேதி 21—4—'48-ல் வெற்றிகரமாக நிறைவேறிற்று. கும்பாபிஷேகத்தைச் சார்ந்த வைதீகக் கிரியைகளையெல்லாம் திருக்கழுக்குன்றம், ஆதி சைவமரபினர், திரு. **C. சந்திரசேகரக் குருக்கள் அவர்கள்** சர்வசாதகமாய் அமர்ந்து ஆகம விதிகள் வழுவாது பக்தியுடனும், யாவரும் ஈடுபடுகின்ற முறையிலும், மிகச் சிறப்பாக நடத்தித்தந்தார்கள். இரவு விநாயகர், சுப்பிரமணியர், காசிவிசுவநாதர், உலகம்மன்.

நடராஜர், சண்டேஸ்வரர், திரு நால்வர் வீதியில் பவனி வந்தனர். இவர்களை பராக்கிரமபாண்டிய மன்னர் முன் நின்று அழைத்துச் சென்றனர், திருப்பணியும், கும்பாபிஷேக முதலிய விசேடங்களும் வெற்றிகரமாய் நடந்தேறப் பலவழிகளில் மனம், வாக்கு, காயம் முதலியவற்றால் ஒத்துழைத்த பெரு மக்களுக்குக் கோயிலாரின் நன்றி உரித்தாகிறது. இவர்களனை வரும் நீடூழி வாழ்க! அவர்கள் குடும்பம் என்றும் தழைக்க. திருப்பணி விவரங்களையும் கும்பாபிஷேகச் சிறப்புகளையும், வரவு செலவு கணக்குகள் உள்பட ஒரு தனிப்புத்தகமாகக் கமிட்டியார் வெளியிட்டிருக்கின்றனர். அதில் விரிவான விவரங்கள் காணலாம். பின்னர் மின்சார விளக்குகள் அமைக்கப்பெற்று கோயிலெங்கும் ஒளிபரந்து வீசுகிறது.

## கல்வெட்டுகள்.

இக்கோயிலில் அநேக கல்வெட்டுகள் உள்ளன. பெரும் பான்மையானவை 16, 17, நூற்றாண்டுகளில் வாழ்ந்த பாண்டிய மன்னரையும், சில, இக்கோயில் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டிய மன்னரையும் அவர் வம்சத்தாரையும் குறிப்பிடுகின்றன.

இக்கல்வெட்டுகளை எடுத்தெழுதி சென்னை அரசாங்கக் கல்வெட்டு இலாகா அதிகாரிகள் 1918-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 6-ம் தேதி ஜி. ஓ. 1172-ல் வெளியிட்டிருக்கின்றனர், இராபர்ட் சூவெல் துரை எழுதி அரசாங்க ஆணைப்படிச் சென்னை பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள தென்னிந்திய சரித்திரச் சாசனங்கள் என்ற நூலில் சில குறிப்புகள் காணப் படுகின்றன. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் தவிர, கிழக்கேயுள்ள குலசேகரமுடையார் கோயிற் சுவர்களிலும், சிதம்பரேஸ்வரர் கோயிற் சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன, இவைகளும் முன்கூறிய ஜி. ஓ-வில் வெளிவந்திருக்கின்றன.

சில கல்வெட்டுகள் பாக்களாகவே அமைந்திருக்கின்றன, சில உரைநடை; இன்னுஞ் சில, குறிப்புகளாகத் தெரிகின்றன.

கல்வெட்டுகளிலிருந்து இக்கோயில் வரலாறு ஒருவாறு திரட்டலாம். இக்கோயில் சாலிவாகன சகாப்தம் 1368 = கி. பி. 1445-ல், பராக்கிரம பாண்டிய மன்னராகிய அரிகேசரிதேவர் கட்டினரென்றும், கோபுரம் கட்டி முடிவதற்கு முன் அவர் காலமாயினரென்றும், பின்னர் அவர் தம்பி சடிலவர்மதேவர் கட்டி முடித்தாரென்றும் முன்னுலேயே கூறப் பட்டிருக்கின்றது. முக்கியமான சில கல்வெட்டுகளைக் கீழே குறிப்பிடுகின்ருேம்.

நிர், 502, சகா. 1419 ஜடிலவர்மன்: தனக்கு நல்ல பெருமாள் சைவ சிகாமணி பட்டன், கோயில் முறைகளை ஒழுங்காய் நடத்தாததாலும் அவர் பந்துக்கள் ஷை முறையின் உரிமைகளைக் கைவிட்டதாலும் இந்தமுறை சிவபாதசேகரன் திக்கெலாம் புகழும் பெருமாளுக்கு மாற்றப்பட்டது.

நிர். 503, சகா. 1412 இக்கோயிலும், சுற்றுக்கோயில் களும் கட்டப்பட்டதைக் குறிப்பிட்டு முறைகாரரின், மக்கள் சகல உரிமைகளுடன் வேலைபார்க்க அனுமதி கொடுக்கிறது.

நிர். 506, கொல்லம் 685. அரிகேசரி என்ற பராக்கிரம பாண்டிய தேவர் தெக்ஷணகாசியில் சிற்ருற்று வடகரையில் விஸ்வநாதருக்கும், கௌரிக்கும் கோயில் கட்டியதாகக் கூறுகின்றது.

நிர். 508, சகா. 1416 குலசேகர தேவரால் கோயிலில் ஸேவை செய்வதற்காக சில ருத்திர கணிகையர்களுக்கு குன்ருக் குடியில் நிலமும், (தென்காசியில்) தோட்டம், மனைக்கட்டுகளும் அளிக்கப்பட்டன.

நிர், 512. சகா. 1475. ஜடிலவர்மன்; விஸ்வநாதருக்கும் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாயன்மார்களுக்கும் வழிபாடுகள் செய்யத் தேவதாய நிலங்கள் கொடுக்கப்பட்டன.

நிர். 518, சகா. 1385. பராக்கிரமபாண்டிய தேவர், பூஜை முறைக்கு 6 பட்டர்கள் நியமித்தல், அவர்களுக்கு நிலம்



வீரபத்திரர்



தமிழணங்கு

H9

வீடுகள் நன்கொடை, இதில் இக்கோயில் தான் கட்டியதாகக் குறிப்பிடப்படுகிறது.

நிர். 520, சகா. 1406, பராக்கிரமபாண்டிய தேவர், இசை பாடவும், நடனமாடவும், பெண் வேலையாட்களுக்கு நீலகண்டன் பெருந்தெருவில் வீடும் தோட்டமும் இனம்.

நிர். 523, சகா. 1467. ஜடிலவர்மன், ஆகமங்கள் புராணங்கள், சைவ சித்தாந்த நூல்கள் வாசிக்க ஓர் மடத்தின் நிர்வாகத்திற்காக சத்தியஞான தரிசனி என்பவருக்கு நிலம் நன்கொடை.

நிர், 527, சகா. 1424. குலசேகர தேவன், கோயில் கட்டியதையும், பற்பல வேலைகளுக்கு ஆட்கள் நியமித்ததையும் குறிப்பிட்டு குன்றுக்குடியில் நிலம் கொடுத்தது. பரிவட்டம் பூமாலை முதலியன கொடுப்பதற்காக, நாட்டீஸ்வரமுடையானுக்கு வீடு நன்கொடை செய்ததையும் கூறுகின்றது,

நிர். 530, சகா. 1480. ஜடிலவர்மன், இரண்டாவது பிரகாரம் ( வடக்கு ) வெற்றியுடையார் சொக்கநாத சுவாமி கோயில் கட்டியதும், அதன் நித்திய பூஜைக்காக குலசேகரப் பேரியில் நிலமளித்ததும்,

நிர். 545, சகா. 1471. ஜடிலவர்மன், கன்னிமார் அம்மன் கோயிலைக் குறிப்பிடுகிறது.

நிர், 576, சகா 1447, கொல்லம் 701. பராக்கிரம பாண்டியர் கட்டிய கோயில் பழுதுபட்டதால். வீரமார்த் தாண்டன் என்ற சிறைவாய் மூத்தவனால், பழுதுகள் பார்க்கப் பட்டு, 700-ம் ஆண்டு மகரமாதம் 4உ பிரமகலசாபிஷேகமும் நடத்தப்பட்டது.

நிர். 579, சகா 1482. குலசேகர கலிங்கராயன் தர்ம கர்த்தா வேலை பார்க்க நிலம் இனம்.

நிர், 580, சகா 1527. தாடி சடைச்சியால் புதிதாய்க் கட்டப்பட்ட கோயிலில் உலகமுழுதுமுடைய நாச்சியாரின் அபிஷேகக் கட்டளைக்காக நிலம் இறும்.

நிர். 601. சகா 1494. பாண்டிய முதலி, அம்மன் கோயில், முன் மண்டபம் கட்டியதும், மாசித் திருநாள் 6-வது விழாவில், திருஞான சம்பந்த சுவாமிகளுக்கு ஞானப்பால் அளிக்கவும், ஆவணி விழா; வஸந்த விழாச் செலவுக்கு நிலங்கள் கொடுத்ததும் கூறுகின்றது.

## குலசேகரமுடையார் கோயிலில் கல்வெட்டுகள்.

நிர். 480, சகா, 1489. ஜடிலவர்மன் ஸ்ரீ வல்லபதேவன். தெக்ஷிணகாசி கீழ்பக்கம் சிற்றுற்றின் வடகரையில் குலசேகர நாதர் குழல்வாய்மொழி மங்கை நாச்சியார் கோயில்களும் சுற்றுக் கோயில்களும் கட்டி நித்திய நைமித்திகம் நடைபெற நிலங்கள் மானிபம்.

## விண்ணவர் எம்பெருமாள் கோயிலில்.

நிர். 498, சகா 1488, ஸ்ரீ வல்லப தேவன், அரசன் ஸ்ரீவலவிண்ணவர் எம்பெருமாள் என்ற அழகர் கோயில் கட்டி நிலங்கள் அளித்தது,

நிர். 500, சகா 1493. இக்கோயிலில் விழாக்களுக்கும் ஸ்ரீபலிக்கும் நிலம் அளித்ததும், கோயில் முன் இராமாநுஜக் கூடம் கட்டி நிலம் அளித்ததும் கூறுகின்றது.

## சிதம்பரேஸ்வரர் கோயிலில்.

நிர். 397, சகா 1469. திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேர்மை கொண்டான் குலசேகரதேவன், புலியூர் பஞ்சாயத்தாரால் நிலம் அளிக்கப்பட்டது.

நிர். 398 - 399, சகா 1530 & 1526. வழிபாடுகளுக்காகவும், கோயில் பழுது பார்க்கவும், செங்கோட்டையில் நிலங்கள் அளித்தது.

இதுவரை எழுதிய கல்வெட்டுகளிலிருந்து தென்காசியிலுள்ள கோயில்கள் கட்டியவர்கள் யாரென்றும் அவர்கள் காலம் யாதென்றும் அவர்கள் செய்த திருப்பணிகள், அளித்த மானிபங்கள், இன்ன இன்னவென்றும், நிர்வாகங்கள் நடத்திய முறையும், கோயில்களைப் பாதுகாத்து வேதங்கள் ஓதவும், திருமுறைகள் பாடவும் திட்டம் வகுத்ததும், காவலர், கணக்கர், கருவூலர், முதலிய பணிவிடைக்காரருக்கும், அறங்காக்கும் ஆட்சியாளருக்கும், தங்கள் கடமைகளைத் தளராது நடத்த நிலங்கள் வழங்கி வந்ததும் புலனாகின்றது.

கல்வெட்டுக்களிலுள்ள பாக்களினின்றும் சரித்திரக் குறிப்புகள் பலவற்றை அறியலாம்.

இராபர்ட் சூவெல் துரை எழுதி அரசாங்கத்தார் ஆணைப்படி சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள " தென்னிந்திய சரித்திரச் சாசனங்கள் " என்ற நூலில் பின் வரும் குறிப்புக்கள் காணப்படுகின்றன:—

பக்கம் 213:- அரிகேசரி பராக்கிரமபாண்டியர் கி. பி. 1422-ல் அரசாளத் தொடங்கினார், அவர் 1463 - 64 வரை ஆண்டிருந்தார். அவர் கல்வெட்டுகள் பல இருக்கின்றன. ( TRAVANCORE ARCA SUR I பக்கம் 44, 95, 126. 514 OF 1909. 172, 178, 188, 199 OF 1895. E, R. 1905, P. 56; 1906, P. 72; 1910, P. 100; 1918, P. 158. )

பக்கம் 217:- கி. பி. 1430-ல் திருநெல்வேலியில் அழகன் பெருமாள் குமார குலசேகரபாண்டியர் பட்டத்துக்கு வந்தார். அவர் மகன் பராக்கிரமன் தென்காசிக் கோபுரத்தைக் கட்டினார். ( T. A. S. I. 53; 278 OF 1908; 198 OF 1895. )

*பக்கம் 272:- கி. பி. 1615-ல் திருநெல்வேலியில் வரகுண சீவல்லப குலசேகரன் ஆண்டு வந்தார். அவர் தென்காசியில் ஒரு வேள்வி செய்தார். அதிலிருந்து அவர் "சோமாசியார் தீட்சிதர்" என்ற பட்டத்துடன் வழங்கப்படுகிறார்.* **( V. R. III. TINN.** *393* **A; T. A. S. I.** *147; 268* **OF** *1908.* **)**

*பக்கம் 381:- கி. பி. 1614. 17-ல் பெருமாள் சீவல மாறன் வரகுண ராமன், (குலசேகர சோமாசியார் தீட்சிதர் எனவும் மறுபெயர்) - இவர் தென்காசியில் ஒரு வேள்வி செய்தார். சாலிவாடியின் மகன் சீவல்லபனாக இவர் இருக்கலாம்.* **( V. R. III. TINNEVELLY,** *393* **- A; TRAVANCORE,** *127;* **T. A. S. I.** *147; 268* **OF** *1908,* **)**

## கல்வெட்டுகள்.

### தென்காசிக்கோயில் பெரிய கோபுரத்துத் தென்சுவரில் உள்ளன.

***( எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம். )***

அன்பினுடன் சகாத்தமா யிரத்து முந்நூற்
 றறுபத்தெட் டதன்மேல் வைகாசித் திங்கள்
மன்தியதி யீரைந்தில் பூறுவ பக்க
 மருவுதெச மியில்வெள்ளி வாரந் தன்னில்
மின்திகழுத் தரநாள் மீனத்தில் வாகைவே
 லரிகே சரிபராக் கிரம மகீபன்
தென்திசையிற் காசிநகர்க் கோயில் காணச்
 சென்று நின்று தரிழ்சணை தான் செய்வித்தானே.

அடைவுதிகழ் சகாத்த மாயிரத்து முந்நூற்
 றறுபத்தொன் பதின்மேற்செல் மிதுன ஞாயற்

னிடைமருவு தியதிபதினெ.........................

.............................................

..................விற்சனிவார மதனில் இராச....

.............................................

உடையவரைத் தென்காசிச் சிவாலயத்தி
னுள்ள மைத்துத் தெள்ளமுத மூட்டினனே.

## கோபுரம் வடசுவர்.

*( கட்டளைக் கலித்துறை. )*

ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிறம பாண்டியனே.

அரிகே சரிமன் பராக்கிறம மாற னரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாதமென் சென்னியதே.

சாத்திரம் பார்த்திங் கியானகண்ட பூசைகள் தாம்நடத்தி
யேத்தியன் பால்விசுவ நாதன்பொற் கோயிலென் றும்புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்கிறம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னினுள் ளார்க்கும் அடைக்கலம் கூறினனே.

சேலே றியவயல் தென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்ன
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்கிறம பாண்டியனே.

மனத்தால் வகுக்கவு மெட்டாத கோயில் வகுக்கமுன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்தென் காசியை யென்று [மண்மேல்
நினைத்தா தரஞ்செய்தங் காவல் புனையும் நிருபர்பதந்
தனைத்தாங்நின் றஞ்சித் தலைமீதி யானுந் தரித்தனனே.

பூந்தண் பொழில்புடை சூழுந்தென் காசியைப் பூதலத்தில்
தாந்தங் கிளையுட னேபுரப் பார்கள்செந் தாமரையாள்
காந்தன் பராக்கிறமக் கைதவன் மானகவ சன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந் நாளும் விளங்குவரே.

காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
ரூண்டில் முடித்துக் கயிலைசென் றனகி லேசர்பதம்
பூண்டுறை சிந்தை யரிகே சரிவிந்தைப் போர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டியனே.

## கோபுரம் தென்சுவர்.

***( எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம். )***

*பன்னுகலியுக நாலாயிரத் தைஞ்ஞூற் றைம்பத்தெட்டின்மே*
*லெவரும் பணிந்து போற்றச்*
*சென்னல்வயல் தென்காசி நகரில்நற் கார்த்திகைத் திங்கள்*
*தியதி யைந்திற் செம்பொன்வார*
*மன்னியமார் கழிநாளில் மதுரைவேந்தன் வடிவெழு*
*தொணுத பராக்கிறம மகிபன்*
*சொன்ன வரைபோல் திருக் கோபுரமுங் காணத்*
*துடியிடையா யுபானமுதல் துடக்கினனே.*

*ஏராருஞ் சகாத்தமாயிரத்து முந்நூற்றெழுபத் தொன்பதின்*
*கார்த்திகை மாதத்திற்* [மேற்
*சிராருந் தியதி யைந்திற் குருவாரத்திற் சிங்கமுகுர்த்*
*தத்தில் மிறுகசிரிழ் சத்தின்*
*னிவரனருளால் வழுதி பராக்கிறம மகிபன்*
*கூரு பானமுதல் கோட்டினனே.*

*மென்காசை மாமல ரன்னமெய் யோர்க்கும் விரிஞ்சனுக்கும்*
*வான்காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்*
*பொன்காசை மேற்சென்று.........கைக்குமிப் பூதலத்துத்*
*தென்காசி...........*

55

கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத் தோசெம்பொ னம்பலத்தோ
வேதத் திலோசிவ லோகத்தி லோவிசுவ நாதனிரு
பாதத் திலோசென்று புக்கான் பராக்கிறம பாண்டியனே.

( வெண்பா. )

ஓங்கு நிலையொன்பது துற்றதிருக் கோபுரமும்
பாங்குபதி னொன்று பயில்தூணுங் – தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து.

## கோபுரம் வடசுவர்க் கால்.

( கட்டளைக் கலித்துறை. )

அணிகொண்ட விந்த வணங்குமொன் றேயடி யேற்குனக்கு
மணிகொண்ட வாசல் மணியும்ஒன் றேபகை மன்னரையும்
பிணிகொண்ட காரையு முன்னீரை யும்பெரும் பூதத்தையும்
பணிகொண்ட செண்பகத் தென்னு பராக்கிறம பாண்டியனே

## கோபுரம் தென்சுவர்க் கால்.

( எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம். )

ஏறிய சகாத்தமாயிரத்து நானூற் றெழுபத்தின்னுவில்
வரிழ்சம்பரிதாபி தனில் மாதம்
தேறிய சித்திரை யிருபத்தொன்பதாகுங் தேதியிரண்
டாம்பக்கங் திங்க ளூரோகணிநாள்
வீறுயர்ந்த மிதுனத்து நெல்வேலி மாறன் வீரவேழ்
குலசேகரச் செழிய னென்று சுர
ராறுபுனை யகிலேசர் காசியிலே விளங்க வணிமவுலி
தரித்தனன் பரராசர் பணிந்தனரே.

( கட்டளைக் கலித்துறை. )

ஏடியல் மாலை யணிந்தாலும் வாடு மெனப்புலவோர்
பாடிய வீரவெண் பாமாலை யைப்பொன்னின் பாண்டியன் [போர்
தேடிய வேற்செழி யன்குல சேகரத் தென்னனைப்போற்
சூடிய வேந்தருண் டோவொரு வேந்தரைச் சொல்லுகிலே.

( அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம். )

சகன்கால மாயிரத்து நானூற்றெண் பத்தாறிற் சலதி சூழ்ந்த
செகங்காண விரத்தாக்ஷி சித்திரையி லிருபதாந் தேதி வேந்தர்
புகழ்ந்தேவல் செயப்பூறுவதி தியாறில் முதல்வாரம் புணர் பூசத்திற்
சுகந்தாதி புனையழகன் சீவலவே ளெனமகுடஞ் சூடி னானே.

## கோபுரம் வடசுவர் மற்றோர் கால்.

( வெண்பா. )

சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடைப்
பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட
கானுலா மாலை கனகமகு டம்புனைந்தான்
மானவே லானபிரா மன்.

சேனுலவு வெண்டிங்கட் செல்வனெனத் தண்ணென்று
நீணிலமோ ரேழு நிழற்றுமே — பேணிவந்து
பூவேந்த ரேத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை.

பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்குங்
கொற்ற முயர்க்குமறங் கூருமே — விற்றுவசம்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

57

## கோபுரம் வடசுவர்.

( வெண்பா. )

நண்புற் றெதிர்ந்தகலி நாலா யிரத்தறுநூற்
றெண்பத்தொன் பானி லிருங்கடல்சூழ் – மண்பெற்று
மின்னுமகு டம்புனைந்தான் வெல்வீர மாறனெனு
மன்னவர்கோ மானபிரா மன்.

கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்
மற்றடந்தோள் வேல்வீர மாறனுக்குச் – சொற்புனைந்தா
னுண்மங் கலமு நவிற்றுகுடை மங்கலமும்
வாண்மங் கலமும் வகுத்து.

( இரட்டை ஆசிரிய விருத்தம். )

அத்தர்தென் காசிகண் டோன்கண்ட வாலயமு
மடியாரும் வாழ்வுபெறவந்
தழகனதி வீரரா மன்சறுவ மானிய
மதாகக் கொடுத்த படிதான்
சித்திரைப் பரணியூர்த் தெண்ட தோடப்பொன்
திரும்பக் கொடுத்தவ் வூரிற்
செங்கோட்டை யார்கொண்ட பகுதியுநிறுத்தித்
திருக்கோயி லிற்பகுதியாய்
வைத்ததை யறக்கழித் தாயங் கணக்குடன்
மாநவமி திருநாளிடை
வந்த காணிக்கை பாட்டப்பகுதி காணம்பல்
வரியிவை யெல்லாங் கழித்துப்
பத்திற மாய்க்குண ராமநாதற்கு மேற்படி
பணங்கழித் தடியர்வீட்டுப்
பணமுங் கழித்திப் படிச்சறுவ மானியைப்
பட்டயமு மருளினனே.

## மாமண்டபம் தென்சுவர்.

சுவஸ்தி ஸ்ரீ கோ சடிலவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகரதேவற்கு யாண்டு இரண்டாவதின் எதிர் நாற்பத்து இரண்டாவது விருச்சிக நாயற்று இருபத்து ஆறுந்தியதி பௌர்ணையும் பிரகஸ்பதிவாரமும்பெற்ற கார்த்திகை நாள் தென் ஆரிநாட்டு சித்ராநதி உத்தர தீரத்து தக்ஷிணகாசியில் முன்னாள் அண்ணாழ்வி பராக்கிறம வாணத்ய தேவர் திருவுள்ளம் பற்றி உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டிப்பித்து இக்கோவில் உபாநாதி ஸ்தூபி பரியந்தம் கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் இடைநாழிகை மகாமண்டபம் சோபாநம் இவையுங் குறைவறத் திருப்பணியுஞ் செய்வித்து ஆவரண கோபுராதிகள் செய்வித்து பூசைக்கு நித்திய நைமித்திகங்களுக்கு வேண்டும் தேவதானமும் விட்டு உத்சவ பரியந்தமாயுள்ள கர்மங்களையும் நடத்தி............அனைத்துக் கொத்து............................... .

(பராக்கிறமனுக்குத் தம்பி சடிலவர்மனான குலசேகர தேவன். இக்குலசேகரனே கோபுரத்தை முடித்தான்.)

### ( கட்டளைக் கலித்துறை. )

விண்ணாடர் போற்றுந்தென் காசிபொற் கோபுர மீதிலெங்க
ளண்ணாழ்வி செய்த பணியிப் படிக்குறை யாக்கிடக்க
வொண்ணா தெனக்கண் டுயர்ந்ததட் டோடெங்கு மூன்றுவித்
மண்ணாளு மாலழ கன்குல சேகர மன்னவனே. [தான்

## அரிகேசரி தேவர் சாசனம். (கி. பி. 1450)

பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசை கலைமகள் நலனுற விளங்கப்
புயவரை மீது சயமகள் புணரக்
கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச்

59

சந்திர குலத்து வந்தவ தரித்து
முந்தையோர் தவத்தின் முளையென வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து

சங்கர சரண பங்கயஞ் சூடிச்
செங்கோ லோச்சி வெண்குடை நிழற்றி
வான வாரியு மன்னருள் வாரியுந்
தான வாரியுந் தப்பா தளித்து

மறக்களை பறித்துநல் லறப்பயிர் விளைத்துச்
சிங்கையி லனுரையி விராசையிற் செண்பையில்
விந்தையி லறந்தையில் முதலையில் வீரையில்
வைப்பாற் ெ.................ன்னரை வென்கண்

டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப்
பதினெண்..................கம் போற்றப்
பதினெண்பாதைப் பார்த்திப ரனைவருந்
திறையுஞ் சின்னமு முறைமுறை குணர்ந்து

குறைபல விரந்து குரைகழ லிறைஞ்ச
வவரவர் வேண்டிய தவரவர்க் கருளி
அந்தண ரனேகர் செந்தழ லோம்ப
விந்தைமுதல் அகரம் ஐந்திடத் தியற்றிச்

சிவனெறி யோங்கச் சிவாற்சனை புரிந்து
மருதூ ராற்கு மண்டப மமைத்துமுன்
ஒருதூர் மூங்கி லுள்புக் கிருந்த
சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப்

பொற்கலத் தமுது பொலிவித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி
விழாவணி நடாத்தி விரைப்புன லாடல்

வழாவகை நடாத்தநின் மன்னரு ளதனல்
வற்ரு வருவியும் வற்றி வற்கட
முற்றவிக் காலத் துறுபுனல் நல்கென
வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச்

சேண்டரு புனலிற் செழும்புன லாட்டி
மின்கால் வேணி விசுவநா தர்க்குத்
தென்கா சிப்பெருங் கோயில் செய்து
நல்லா கமவழி நைமித் திகமுடன்

எல்லாப் பூசையும் எக்கோ யிலினும்
பொருள்முத லனைத்தும் புரையற நடாத்தித்
திருமலி செம்பொற் சிங்கா சனமிசை
உலக முழுதும் உடையா ருடனே

இலகு கருணை யிரண்டுரு வென்ன
அம்மையும் அப்பனு மாயனைத் துயிர்க்கும்
இம்மைப் பயனு மறுமைக் குறுதியு
மேம்பட நல்கி வீற்றிருந் தருளிய

ஸ்ரீ அரி...... ......தேவரான பராக்கிரம பாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது......ற்று இருபத்தொன்ருந் தியதியும் பூர்ணையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சோதிநாள் தேன்வாரிநாட்டு சித்ரநதி உத்தர தீரத்தில் தக்ஷிணகாசியிலே உடையார் விஸ்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி ஸ்தூபி பய்யந்தமுந் திருப்பணிசெய்து உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டித்து அர்த்த மண்டபம், இடைநாழிகை, மஹா மண்டபம், ஸோபாநம் இவையுந் திருப்பணி செய்து, திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாக உள்ள திருவுடம்புகளும் ஏறி அருளப் பண்ணுவித்து, ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து, மேல் உடையார் விஸ்வநாதர் பூஜைக்கு அமுதுபடி சாத்துப்படி திருமாலைத் திருப்பரிவட்டந் திருவிளக்கு உட்பட்ட பல நித்ய நியமங்களுக்கும், பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும், முன்னுள் இரண்டாவதின் எதிர இருபத்து மூன்ருவது முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட

பற்றுக்களில் தென்வாரி நாட்டுத் தென்காசிக்குப் பெரு நான்கெல்கையாவது:—

கீழ் எல்கை புலியூற் பற்றான காராண்குளத்தில் நீர்நக்கல்லுக்கும் பரிம்புக்கும் புலியூர்அகரப்பற்றில் புஞ்சைக்கும் நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறத்தில் மேல் எல்கைக்கு மேற்கும் தென் எல்கை சித்ரநதிக்கு வடக்கு, மேல் எல்கை குன்றக்குடிப் பரிம்புக்குக் கிழக்கும், வ.........சென்னய்ப் பொற்றைக்கும் குத்துக்கல்லுக்கும் தெற்கும் ஆக இன்னான் கெல்......ட்டபற்றும்,

இந்த நதிக்கு தக்ஷிண தீரத்தில் வாயுளான் குடிப் பற்றுக்குப் பெருநான் கெல்கையாவது:-

கீழ் எல்கை புலியூர் அணைக்கும் திருச்சாலைக் குடிப் பற்றுக்கும் ஆழங்காலுக்கு மேற்கும், தென் எல்கை திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் பராக்ரமபாண்டிய சதுர்வேதி மங்கலத்து பட்டகள் அகரப்பற்றில் வட வெல்கைக்கும் உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார் பழந் தேவ தானத்துக்கு வடக்கும் மேல் எல்கை வாயுளான்குடி அணைக்குக் கிழக்கும், வட எல்கை சித்ர நதிக்குத் தெற்கும் ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றும்;

குன்றக்குடிப் பற்றுக்குப் பெரு நான்கெல்கையாவது கீழ் எல்கை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும், தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கும், மேல் எல்கை செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூற்குப் போகிற பெருவழிக்குக் கிழக்கு, வட எல்லை கடமர் குளத்துக்குத் தெற்கு, ஆக இன்னான் கெல்கைக்குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார் தேவதானமான நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் நீங்கலாக உள்ள பற்றும்;

பராக்கிரமபாண்டிய நல்லூர் பற்றுக்குப் பெரு நான்கெல்கையாவது:- கீழ் எல்கை இலுப்பைத் தொண்டிற் பெருவழிக்கு மேற்கும், தென் எல்கை இக்குளத்தின்

நீர்நக்கல்லுக்கு வடக்கும், மேல் எல்கை உடையார் திருக்குற்ருலமுடை......ர் பழங் தேவதானமான திருச்சாலைக் குடிப் பற்றுக்குக் கிழக்கும்; வடஎல்கை சித்ர......தெற்கும், ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றில் இருங்கிண்டி ஸ்ரீ பத்மநாபன் தான இறையிலி நிலமிரண்டு மாவும் நீங்கலாக உள்ள பற்று;

நல்லூற் பற்றில் வள்ளை முட்டமும் இக்குளத்தில் நீர்ப்பாயும் நிலமாய் வடவூற் பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்றுமா அரையும் ஆக இப்பற்றுக்குப் பெருநான்கெல்கை யாவது;- கீழ் எல்கை காடேற்றிப் பற்றுக்கு மேற்கும், தென் எல்கை வடவூர்ப்பற்றில் செங்குளத்தில் நீர்பாயு நிலத்துக்கும் தஞ்சாவூற் பெருங்காலுக்கும் அனுபோகமழகி யான் குளத்தில் நீர்பாயும் பற்றுக்கு வடக்கும், மேல் எல்லை இக்குளத்தில் நீர்நக்கலுக்கும் தவணைப்பற்றுக்கும் கிழக்கு, வட எல்கை தஞ்சாவூரில் நின்றும் தவணைக்குப் போகிற பெருவழிக்குத் தெற்கும் ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றும்;

வடவாரி நாட்டுப் பைம்பொழிற் பற்றில் நல்லாண் பிள்ளைப் பெற்ருளுக்கும் விஸ்வநாதப் பேரேரிக்கும் பெருநான் கெல்கையாவது:- கீழ் எல்கை செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூற்குப் போகிற பெருவழிக்கு மேற்கு தென் எல்கை ஆற்றுக்கு வடக்கு, மேல் எல்கை பைம்பொழிலில் நின்றும் நல்லூற்குப் போகிற பெருவழிக்கும் முழங்கால்முட்டிப் பாறைக்கும் கிழக்கு வட எல்கை தேனிடு பொற்றைக்குத் தெற்கு, ஆ......ன் கெல்கைக்குட்பட்ட பற்றும்;

முப்பதாவது மேஷ ஞாயிற்று இருபத்தெ.......... தியதியும் பூர்வபக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் நாம் முன்பு விட்ட பற்றுக்கள் நீங்கலாக நாளது பூஜைச் செலவுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுலராம நல்லூரான புலியூர் பற்றுக்கும் வீரபாண்டிய

நல்லூர்ப் பற்றுக்கும் பெருநான் கெல்கையாவது:— புலியூர் பற்றுக்குப் பெருநான் கெல்கைக் கீழ் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டாக்குறிச்சிப் பற்றுக்கு மேற்கு, தென் எல்கைச் சிற்ருற்றுக்கு வடக்கு, மேல் எல்கை பழந் தேவதானமான தென்காசிப் பற்றுக்குக் கிழக்கு, வட எல்கை ஆயக்குடிப் பற்றுக்குத் தெற்கு ஆக இன்னுன் கெல்கைக்குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ருலமுடைய நாயனுர் தேவதானமும், உடையார் விக்ரம பாண்டீஸ்வர முடைய நாயனுர் தேவதானமும், நயினுர் திருவிருந்தபெருமாள் திருவிடையாட்டமும், ஸ்ரீ க்ருஷ்ணந்திருவிடை யாட்டமும் பராக்ரம பாண்டிய நல்லூரில் நயினுர் திருவேங்கட நாதன் திருவிடையாட்டமும், முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறமும் அகரப்பற்றும் நீங்கலாக இன்னுன் கெல்கைக்குட் பட்ட பற்றும்;

வீரபாண்டிய நல்லூருக்குப் பெருநான் கெல்கை யாவது.- கீழ் எல்கை தட்டான் குளத்துப் பரிம்புக்கு மேற்கு, தென் எல்கை திருச்சிற்றம்பலத்துக் காலான இராசகுல ரா.........காலுக்கும் நயினுர் திருவிருந்த பெருமாள் திருவிடை யாட்டமான ஆகவராம..........துக்கும் வடக்கு, மேல் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டாக்குறிச்சிப் பற்றுக்குக் கிழக்கு, வட எல்கை வீந்தனூர்ப் பெருவழிக்குத் தெற்கு, ஆக இன்னுன்கெல்கைக்குட்பட்ட பற்றும் ஆக இப் பற்றுக்களில் பெருநான் கெல்கைக்குட்பட்ட நஞ்செய், புஞ்சை, மாவடை, மரவடை, பட்டடை, கொடித்தோட்டம், செக்கிறை மற்றுமுள்ள ஸமஸ்தப்ராப்திகளும் முப்பதாவது பசான முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இம்மரியாதியிலே இவ்வோலை பிடிபாடாகக்கொண்டு ஆசந்த்ரதாரவத் இவ்வாலயம் உள்ள அளவும் கையாண்டு கல்லினுஞ், செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வற நடத்திப் போதவும் பாற்க. இவை கிடாரத்தூருடையான் எழுத்து உ துல்யம்.

# வரவும் செலவும்.

## பசலி 1370

| வரவு | | ரூபா | ந.பை |
|---|---|---|---|
| 1. | நில வருமானம் | 26,828 | 48 |
| 2. | கட்டிட வாடகை வருமானம் | 4,155 | 00 |
| 3. | உண்டியல் & தஸ்திக் வகையரா | 1,652 | 21 |
| 4. | வட்டி | 2,096 | 34 |
| 5. | அர்ச்சனை வகையரா | 300 | 56 |
| | ஆக மொத்தம் வரவு ரூ. | 35,032 | 59 |

| செலவு | | ரூபா | ந பை |
|---|---|---|---|
| 1. | சிப்பந்திச் செலவு | 8,48 | 54 |
| 2. | வழிச் செலவு | 123 | 64 |
| 3. | கணக்கு சுவடிகள் வகையரா | 212 | 51 |
| 4. | நித்திய படித்தரம், மின் விளக்கு கூலி | 8,472 | 15 |
| 5. | திருவிழாக்கள் & மதப் பிரசாரம் | 8,988 | 54 |
| 6. | நில மராமத்து | 1,339 | 34 |
| 7. | இறை வரி | 1,487 | 57 |
| 8. | நகராட்சிக் கழகத் தீர்வை | 293 | 12 |
| 9. | கட்டட மராமத்து | 113 | 29 |
| 10. | சுகாதாரம் | 36 | 00 |
| 11. | கணக்குத் தணிக்கை | 1,103 | 20 |
| 12. | ஹிந்து அறநிலையக் காப்புக் கழகக் கட்டணம் | 2,000 | 00 |
| 13. | சில்லறைச் செலவு | 266 | 79 |
| 14. | வட்டி | 352 | 87 |
| | ஆக மொத்தம் செலவு ரூபாய் | 33,274 | 56 |

## வழக்குகள்.

ஆனைப்பாலப் படித்துறை, தீர்த்தவாரி மண்டபம், அனுப்பு மண்டபம், அனுப்பு மண்டபத்திற்குக் கீழ்புறமுள்ள சாமி சன்னிதித் தெருவில் திருவிழாக் காலங்களில் பந்தல் போடல் முதலிய உரிமை (EASEMENT RIGHT) இவைகள் சம்பந்தமாகச் சைவர்கள் 112 பேர்கள் இவ்வூர் மகமதியர் மேல் அம்பாசமுத்திரம் முனிசிபு கோர்ட்டில் O. S. எண் 621 OF 1912 வழக்கு நடந்து இவை கோவிலுக்கே சொந்தமெண முடிவாயிற்று. அதன் மேல் திருநெல்வேலி ஜில்லாக் கோர்ட்டிலும் (A. S. எண் 344 OF 1913) சென்னை, உயர் நீதி மன்றத்திலும் (S. A. எண் 114 OF 1915) இவ்வழக்கு நடைபெற்று எல்லா இடங்களிலும் கோவிலுக்கே மேலே கண்ட சொத்து சொந்தம் என்ற முடிவே அமைந்தது.

கோவிலின் வடகிழக்கிலிருந்து தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள வெளி மதில்களை மகமதியர் 1923-ல் இடித்து விட்டனர். அதன்மேல் திருநெல்வேலி ஸப்கோர்ட்டில் (O. S. எண் 35 OF 1929) வழக்குத் தொடர்ந்ததில் தெப்பக்குளமும், சுற்றிடமும் அதன் தெற்கிலுள்ள முடுக்கும் கோவிலுக்கே சொந்தம் என்று முடிவாயிற்று. அதன்மேல் மகமதியர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கினைக் கொண்டு சென்றார்கள். இந்நிலையில் தருமகர்த்தர்கள் தெப்பக்குளம் சுற்றுச் சுவர்களைக் கட்டியும், வாசல்கள் அமைத்தும் செம்மை செய்தார்கள். மகமதியர் வழக்கை மேல் நடத்தாமல் நிறுத்திக் கொண்டார்கள். இதனால் முடிவான நலம் கோவிலுக்கே கிடைத்தது. தெப்பக்குளமும், அதன் சுற்றுமதிலும், அதன் தெற்கிலுள்ள முடுக்கும், அனுப்பு மண்டபமும், தீர்த்தவாரி மண்டபமும், ஆனைப்பாலப் படித்துறை முதலிய சகல சொத்துக்களையும் இப்போது ஸ்ரீ காசிவிசுவநாதர் கோயிலார் யாதொரு தடையுமில்லாமல் அனுபவித்து வருகின்றதோடு அனுப்பு மண்டபத்திற்குக் கீழ்புறம் சாமி சன்னிதித் தெருவின் பாகத்தில் பந்தல் முதலியன அமைத்தும் அனுபவித்து வருகின்றனர்.

திருநீறுபற்றிய வழக்கு ஒன்று நடந்தது. கோவிலில் பூஜை காலங்களில் வேதமோதுதல் முடிந்தவுடன் தேவாரம் ஓதத் தொடங்கு முன் தங்களுக்கு திருநீறு தரவேண்டுமென்று ஸ்மார்த்தர்கள் தென்காசி முனிசீபுக் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்கள். தேவாரம் ஓதுமுன் திருநீறு கொடுத்தல் கூடாது எனத் தர்மகர்த்தர்கள் உண்மை துணிந்தனர். அவ்வழக்குத் தள்ளப்பெற்றது.

## நிர்வாகம்.

தமிழ்நாட்டு அரசின் ஹிந்து அறநிலையக் காப்புக் கழகத்தார் ஏற்படுத்திய ஓர் திட்டப்படி இக்கோயில் மூன்று தருமகருத்தர்களாலே ஆளப்பெற்று வருகிறது. 1. திருவாளர் **பி. சு. பிச்சாண்டி செட்டியார் அவர்கள்,** (ஆட்சித் தர்மகர்த்தர்) 2. **மு. சிவகுருநாத பிள்ளையவர்கள்,** பீ. ஏ., பீ. எல்., 3. **சு. ஆறுமுக முதலியார் அவர்கள்** மூவரும் தர்மகர்த்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அத்திட்டப்படி ஓர் ஆணையாளரும் நியமிக்கப்பட்டிருக்கின்றார். தற்போதுள்ள ஆணையாளர் திருவாளர் **சு. கணபதியா பிள்ளை அவர்கள்.**

இக்கோயிலில் சமயகுரவர் நால்வர் திருநாட்களும் நடைபெற்று வருகிறது. திருவிழாக் காலங்களில் சமய விரிவுரைகள் நடைபெறுகின்றன.

தென்காசி, சிறந்த புலவர்களாகிய பாண்டிய அரசர்கள் பலர் அரசு வீற்றிருந்து செங்கோல் செலுத்திய திருநகர். புலவர்க்கு ஔடதமாகிய நைடதத்தையும் காசிக் கண்டத்தையும், வெற்றி வேற்கையையும் இயற்றியருளிய அரசர் பெருமான் வெற்றி வேற்கை வீரராமன், கொற்கையாளி, குலசேகரபாண்டியர் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தது இந்நகரிலேயே. தென்காசிக் கோவிலின் கருவூல அறையினுள்ளே ஒரு சுரங்க வாயில் இருக்கிறது. இதற்கும் குலசேகரமுடையார் கோவிலிலுள்ள சுரங்க வாயிலுக்கும் தொடர்பு இருந்ததாக அறிந்த பெரியோர் கூறுகின்றார்கள்.

67

" சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கமெலாம் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆஉரித்துத் தின்று உழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந் தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே. "

என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. இதனைச் சிரமேற் கொண்டு சில தெருக்களில் நடக்கவும் உரிமை பெறாது ஒதுக்கப்பட்ட ஹரிஜன மக்களுக்குக் கோவிலினுள்ளே வந்து வழிபட உரிமை 1938-ம் வருடத்தில் கொடுக்கப்பட்டது.

1950-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 23-ம் தேதி சுதந்திர இந்தியாவில் சென்னை மாகாண முதல் கவர்னர், மே. த. கிருஷ்ண ஸிங், ( பவநகர் மஹராஜா ) அவர்கள் இக்கோயிலில் வந்து ஸ்ரீ காசிவிஸ்வநாதப் பெருமானையும், ஈஸ்வரி உலகம்மை யையும் வழிபட்டார்கள். சிற்பங்களைப் பார்வையிட்டு அவற்றின் அழகை வியந்தனர்.

திருவாவடுதுறை, ஆதீனம் 20-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பரமாச்சாரிய சுவாமிகள் தங்கள் தென்னாட்டுச் சிவஸ்தல யாத்திரையில் 1950-ம் வருஷம் டிசம்பர் மாதம் 11-ம் தேதி இக்கோவில் வந்து சிறப்பாக வழிபாடு செய்தனர்.

1951-ம் வருடம் அக்டோபர் மாதம் 5-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை தருமபுர ஆதீனம் 25-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருக்குற்றால தலயாத்திரையின் போது இக்கோயில் வந்து வழிபாடு செய்தனர்.

இத்தகைய சிறந்த கோவில் இடிந்த கோபுரத்தோடிருக் கின்றது. இக்கோபுரம் பழையபடி அழகுபெறக் கட்டப் பெறுதல் வேண்டும். இக்கோவிலுக்கு ஏராளமான

சொத்துக்கள் இருந்தன என்பது கல்வெட்டுக்களினுல் தெரிய வருகிறது. வழியுண்டானுல் அவைகள் மீண்டும் வருதல் வேண்டும்.

இக்கோயிலில் சுவாமி சந்நிதியில் திரு ஓலக்க மண்டபத்தின் கற்றூண்களிலுள்ள சிலைகளின் படங்களை இப்புத்தகத்திற் காணலாம். சைவசித்தாந்தப் புலவரும், ஆராய்ச்சியாளருமான, பெருமாள்புரம், உயர்திரு. டாக்டர் **D. R.** அண்ணுமலைப் பிள்ளை **L. M. S. S. A., M. R. A. S. (LON.)** அவர்கள் கோயிலார் வேண்டுகோளுக்கிணங்கி இச் சிலைகளின் படங்கள் பிடித்து மனமுவந்து இலவசமாய் உதவினுர்கள். அவர்களுக்குக் கோயிலாரின் நன்றி உரித்தாகிறது. அவர்களின் ஆர்வமும் இறைபணியின் திறமும் பரந்த நோக்கும் புகழத்தகுந்தன. இவர்களுக்கு இறைவன் எல்லா நலன்களையும் பாலிப்பாராக.

## இறுதியில் முடிவுரையாக ஓர் வேண்டுகோள்.

இக்கோயில் எவ்வளவு சீர் சிறப்புகளுடன் விளங்கினுலும் அதன் ராஜகோபுரம் தற்போது சீர்கேடடைந்து கோயிலின் தோற்றத்தையே மாற்றிவிடுகிறதென்பது யாவரும் வருந்தத்தக்கதோர் செய்தி. இந்நிலமை எப்படி வந்ததென்று முன்னமேயே கூறப்பட்டிருக்கின்றது. இக் கோபுரம் தீயினுல் வெடிப்புண்டு தலையிழந்து இரண்டு சுவராகவும் ஒன்பது மாடங்களுள்ளதில் 2 மாடங்கள் மறைந்தும் மாடங்களாக இல்லாமல் 7 மாட உயரம் மட்டும் ஒரே சுவராகவும் பின் சுவர் முழுதும் விழுந்தும் நிற்கின்றது. தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய கோபுரங்களில் இது ஒன்று என்னும் பெருமையுடையது. உயரம் சுமார் 170 அடி அகலம் கீழே 94½ அடி. நீளம் 136 அடி.

இப்போதுள்ள சீர் கேடான நிலைமையைச் சீர்படுத்த வேண்டியது ஹிந்து நன் மக்களின் முக்கிய கடமையாகும்.

69

ஒன்று பழைய நிலைமைக்குத் திருத்தியமைக்கவேண்டும். அல்லது இப்போதிருப்பதையாவது திருத்திக் கண்ணுக்கினிய தாகவாவது அமைக்க வேண்டும். ஹிந்து மக்கள் கோபுர நிலைமையைப்பற்றி மிகவும் கவலைப்படுகின்றார்கள். கோயிலின் பெருமையைக் கருதியும் ஊர் நன்மை, மக்கள் நன்மைகளைக் கருதியும் சீர்திருத்த வேலை அவசரமாய் ஆரம்பிக்கப்படவும் வேண்டும். ஆரம்பித்து முடித்தால் எல்லாம் நன்மையாகவே பயனளிக்கும். ஆகையால் ஹிந்து மக்கள் தங்களால் இயன்ற வாறு மன வாக்குக் காயங்களாலும் பொருளாலும் பேருதவி செய்து இப்புனித வேலையில் உடனே ஈடுபட வேண்டுமென்று ஸ்ரீ உலகம்மன் சமேத காசிவிஸ்வநாதப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். கோயிலை அமைத்த பராக்ரம பாண்டியரும் தம்முடைய சூக்ஷ்ம உடம்பிலிருந்து இக் காட்சியைக் கண்டு களித்து இதில் ஈடுபடுகின்றவர்களைத் தாம் முன்னேமேயே பாடியபடி வாழ்த்தியும் பணிந்து கொண்டு மிருப்பாரென்பதற்கையமில்லை. ஓங்குக கோபுரம்.

ஸ்ரீ காசிவிசுவநாதப் பெருமான் கருணை உலகெங்கும் பரவுக, அவர் பொன்னடிகளே நமக்குத் துணை.

என்று மின்பம் பெருகு மியல்பினோ
டொன்று காதலித்துள்ளமு மோங்கிட
மன்றுளா ரடியாராவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவியுலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ
மீனாக்ஷி பிரஸ்